# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

**டிசம்பர் 2001 ஜீவியம் 7 மலர் 8**

## இம்மாத மலரில்..........


| பொருளடக்கம் | பக்கம் |
|---|---|
| யோக வாழ்க்கை விளக்கம் IV | 2 |
| இம்மாதச் செய்தி | 13 |
| சிறு குறிப்புகள் | 14 |
| லைப் டிவைன் | 16 |
| கன்சல்டன்சி | 22 |
| அன்பர் கடிதம் | 25 |
| பகவானுடைய இதர நூல்கள் | 27 |
| பகவான் ஸ்ரீ அரவிந்தர் உடலில் பிரம்மம் சித்தித்தது | 29 |
| அஜெண்டா | 35 |
| எது நியாயம் | 37 |
| சாவித்ரி | 49 |
| பிரார்த்தனை பலிக்க வேண்டும் | 51 |
| லைப் டிவைன் - கருத்து | 63 |


* * *

**கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.**

**வருடச் சந்தா ரூ.60/-**

# யோக வாழ்க்கை விளக்கம் IV

கர்மயோகி

**671) சில்லறை ஆசைக்குரிய எந்தச் செயலும், ஆனந்தத்தின் பிறப்பிடமாக இருக்க முடியும். ஜீவியத்தை உயர்த்தி, போக்கை மாற்றினால் போதும்.**

***ஜீவியம் உயர்ந்தால், சில்லறை ஆசையிலும் ஆனந்தம் வரும்.***

செயலால் உயர்ந்தவை, தாழ்ந்தவை என்றுண்டு. வேதம் பயில்வது, பிறர் உயிரைக் காப்பாற்றுவது, உணவுப்பொருள் உற்பத்தி செய்வது ஆகியவை செயலால் உயர்ந்தவை. கோள் சொல்வது, பிறர் வாழ்வை பாழ் செய்வது, கொலை செய்வது ஆகியவை செயலால் தாழ்ந்தவை. அரிபொருளான விதிவிலக்காக, நல்ல செயலும் தவறாக இருக்க முடியும். அது செய்யும் நோக்கத்தைப் பொருத்தது. Devil quoting scriptures சாத்தான் வேதம் சொல்வது போல் என்ற மொழி வழங்குவது அதனால்தான்.

1942இல் ஒரு தலைசிறந்த மாணவன் SSLC பரீட்சை எழுத வேண்டும். எல்லா பாடங்களிலும் முதல் மார்க் வாங்கும் மாணவன் என்பதால், கணிதத்தில் 0 வாங்கினாலும் வருஷா வருஷம் பாஸ் போட்டு SSLCக்கு வந்துவிட்டான். மன்னராட்சி நடக்குமிடம். சிறிய ஊர். பையனையும் அவன் குடும்பத்தையும் பள்ளியில் அனைவரும் அறிவர். SSLC பாஸ் செய்துவிட்டால் கணித பாடம் இனி தேவையில்லை. பாஸ் என்பது நடக்காத காரியம். தலைமை ஆசிரியர் 'பச்சை மிளகாய்' எனக் கட்டுப்பாட்டில் பெயர் வாங்கியவர். அவரே கணித ஆசிரியர். கணிதப் பரிட்சையன்று அவர் "இந்த மாணவன் பெயிலாகக் கூடாது, நான் எந்த நரகத்திற்குப் போனாலும் சரி, அந்தப் பாவத்தை நானே என் கையால் செய்கிறேன்" என்று அவனிடம் ஓடி வந்தார். 3 கணக்கு அவனுக்குச் சொல்லிக் கொடுத்து எழுதச் சொன்னார். பையன் பாஸ் செய்துவிட்டான். தலைமை ஆசிரியரே இந்தத் தவற்றைச் செய்வது மன்னிக்க முடியாததொன்று.



அவர் நோக்கம் கருதி அது பாவமான செயலிலிருந்து மாறி புண்ணியமான செயலாகிறது.

ஆசை யோகத்திற்கும், தவத்திற்கும் எதிரி. ஆனந்தமும், ஆசையும் ஒரே (vibrations) மாதிரியானவை. ஆனந்தம் உயர்ந்தது, ஆசை தாழ்ந்தது. ஆசையின் சுவடு அழியும்வரை ஆனந்தத்தை உணர முடியாது என்று அன்னை கூறுகிறார். (Desire, petty desire) ஆசையும், சில்லறை ஆசையும் சிறிய மனிதனுக்குரியவை. ஆசையே தடையென்றால், சில்லறை ஆசையைப் பற்றிச் சொல்ல வேண்டாம். விதிக்கு விலக்குண்டு.

செய்யும் நோக்கம் கருதி எந்தச் செயலும் ஆனந்தத்தை உணர முடியும். அடிப்படைத் தத்துவமாகப் பூரண யோகத்திற்கு அமைந்தது, "எந்தச் செயலையும் ஆன்மீக முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தலாம்" என்பது. காமக்குரோத லோப மோகம் தபஸ்விக்கு எதிரி. மனதைக் கடக்கும்வரை இந்தச் சட்டம். மனதைக் கடந்தால் தெய்வநிலையைத் தாண்டுகிறோம். தெய்வநிலையைத் தாண்டி, அகந்தை அழிந்து, மனத்திலிருந்து விடுபட்டால் காமமும் ஆன்மீக முன்னேற்றத்திற்குரிய கருவியாக முடியும் என்பதை விளக்கும்படி கேட்ட சாதகருக்கு பகவான், "அது சரி. அந்நிலைக்கு வந்தவருக்கு அதைக் கற்பிக்க இயலும்" என்றார்.

பொதுவாக வாழ்வில் சிறியவர் பெரிய காரியம் செய்யும் சந்தர்ப்பங்களையும், பெரியவர் சிறிய காரியங்களைச் செய்யும் சந்தர்ப்பங்களையும் நாம் பார்ப்பதுண்டு. அது வாழ்வில் விதிவிலக்கான செயல்கள். அத்தலைப்பில் வருவதே மேற்சொன்ன சட்டம். ஆனால் இது அன்னை வாழ்வுக்குரியது. அதாவது வாழ்வு மையத்திலிருந்து மாறி, நிரந்தரமாகவும் மாறி, அன்னை வாழ்வின் மையத்திற்கு வந்தபின், இது உண்மையாக முடியும்.

இது உண்மையானால் ஆசையாக இருந்தாலும் பரவாயில்லை, தவறில்லை என்ற நிலையிருக்காது. சிறிய ஆசை, சில்லறை

ஆசையாக இருப்பதால், அச்செயல் திருவுருமாற்றமடைந்தால் அது பேரின்பமாகவும், பெரிய ஆனந்தமாகவும் மாறுகிறது.

திருவுருமாற்றத்தில் வேறோர் அம்சமும் உண்டு. திருவுருமாற்றம் வரும் நிலையில், சில்லறை ஆசைகள் மாறி, ஆசை நிலையைக் கடந்து ஆனந்த நிலையை அடைந்திருக்கும். விதிவிலக்காக அதுபோல் மாறாதவையும் உண்டு. மாறாவிட்டாலும், சிறிய ஆசையானாலும், நோக்கம் கருதி ஆனந்தத்தை உற்பத்தி செய்யும். உலகுக்கே இவை புதியவை என்பதால் பலருக்கும் புரியும் உதாரணம் தருவது எளிதன்று. ஓரிரு சாதகர்களை அன்னை கேலி செய்வதுண்டு. ஆசாரப் பிராமணக் குடும்பத்தவர் சென்ற தலைமுறையில் கிறிஸ்துவராகி, வெள்ளைக்காரியை மணந்தவர், வேட்டியே கட்டியதில்லை. அவரை அன்னை சிறு பிள்ளைமாதிரி (silly baby) சில சமயங்களில் நடத்துவதுண்டு. பஞ்சகச்சம் கட்டிக் கொண்டு அவர் வந்தபொழுது யார் இந்தப் பொம்பளை எனக் கேட்டார். அவரை ஒரு முறை தலையில் குட்டினார். அந்தக் குட்டு ஆனந்த அலைகளை அவருள் எழுப்பியது. சில்லறையாகச் செய்தாலும், ஆனந்தம் பிறக்கும்.

❋ ❋ ❋

**672) சிறிய விஷயங்களில் இம்மாற்றத்தைச் செய்வது கடினம். பெரும்பாலான செயல்களை மாற்றிவிட முடியும். சில, மாறுதல்களுக்கு இடம் கொடுக்காமல் நிற்கும். அவை அழிக்கப்பட வேண்டியவை.**

*அழிய வேண்டியது மாறாது. மாற முடியாதது அழிவை அழிக்கும்.*

அடிப்படையில் சிறியது, பெரியது என்பதில்லை. ஆனந்தம் பெற மேல் உலகுக்குச் செல்ல வேண்டும். இந்த உலகில் ஆனந்தமில்லை என்பது நாம் அறிந்த உலகம். ஆனந்தத்தை இந்த உலகில் அனுபவிக்க முடியும் என்பது மட்டுமன்று, இவ்வுலகில் ஆனந்தம் பெற்றால் அது ஆனந்தத்திலிருந்து (bliss) சிருஷ்டியின் ஆனந்தமாக



(delight) மாறும். அது பெரியது என்ற தத்துவம் பகவான் ஸ்ரீ அரவிந்தருடையது. அந்த ஆனந்தத்தைத் தேடியே இறைவன் சிருஷ்டித்தான். அவன் லீலையை மேற்கொண்டதே அதற்காகத் தான். நாம் அதைப் பெற வேண்டும். அதற்கு நாம் இறைவனாக வேண்டும். இறைவனுக்கு முன் சத்தியஜீவனாக வேண்டும்.

மாற்றம் எல்லா நிலைகளுக்கும் உண்டு என்பது தத்துவம். நடைமுறையில் பெரியதை மாற்றலாம், சிறியதை மாற்றுவது எளிதன்று. விரயம் என்பது நமக்குக் கஷ்டமாக இருக்கிறது. அதேபோல் மரணம், அழிவு என்பவை மனிதனுக்குக் கஷ்டம், வருத்தம் தரக்கூடியவை. சிருஷ்டியில் எழுபவையெல்லாம் வாழ்வதற்குத் தகுதியுள்ளவையல்ல. தகுதியற்றதை வாழ்வு அழிக்கிறது. இந்தத் தத்துவத்தை விளக்கும் நிகழ்ச்சியை அன்னை தாம் வளர்த்த பூனையின் குட்டி போட்டபொழுது நடந்ததைச் சொல்லி விளக்குகிறார். அவர் இதை விளக்கச் சொல்லவில்லை. வேறு சந்தர்ப்பத்தில் சொல்லிய கதை அது. பூனை தான் போட்ட குட்டிகளில் இரண்டு முடமாக இருந்ததைப் பார்த்து, இவை பிழைக்கக் கூடியவையல்ல என்று கண்டு, அதன் மீது உட்கார்ந்து அந்த இரண்டு குட்டிகளையும் கொன்றுவிட்டது. ‘‘அழிக்கப்பட வேண்டியவை அழிக்கப்பட வேண்டும்’’ என்ற சட்டம் இங்கு செயல்படுகிறது. நமக்கு அது மனதிற்கு இதமாக இருக்காது. ஆனால் வாழ்க்கை நியதி அது.

சமூகம் மாறும்பொழுது, பல பயனற்றுப் போகும். கார் வந்தபின், வந்து பிரபலமான பின், குதிரை, குதிரை வண்டி ஐரோப்பாவிலிருந்து மறைந்துவிட்டன. இனி அவற்றை மியூசியத்தில்தான் வைக்க வேண்டும். அவை அழிந்துவிட்டன என நாம் வருத்தப்படுவதில்லை. அதேபோல் சமூகத்தில் இன்றுள்ள பழக்கங்கள் அனைத்தும் திருவுரு மாற்றமடைந்தாலும், சில திருவுருமாற்றமடைய மறுக்கும். அவை அழிக்கப்பட வேண்டியவையாகும். போட்டி, ஒத்துழைப்பாக மாறும். பொறாமை உதாரகுணமாகும். சோம்பல் சுறுசுறுப்பாக மாறும். தன் கடைசி வருஷத்தில் அன்னை, “என்னால் எந்தக் குற்றத்தையும் மன்னிக்க முடியும். கொடுமை செய்பவர்களையும் மன்னிக்கும் மனம்

எனக்குண்டு. ஆனால் கொடுமை செய்து அதில் சந்தோஷம் அடைபவரை என்னால் பொறுக்க முடியாது" என்றார். பிறரைக் குறைவாகப் பேசுவது, தன் குழந்தையை அழவிட்டு வேடிக்கைப் பார்ப்பது போன்ற சில குணங்கள் மாற மறுத்தால், அவற்றை அழிக்க நாம் தயங்குதல் கூடாது. அந்தக் குணங்கள் அழியும் நேரம் உலகத்தில் வந்து விட்டால் அவை அன்னை சக்தியைத் தேடி வந்து, "எங்களை அழித்து விடுங்கள்" என்று மன்றாடும்.

❋ ❋ ❋

**673) எவ்வளவுக்கெவ்வளவு மட்டமானதாகவும், சிறியதாகவுமிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அச்செயல் திருவுருமாற்றத்தால் அதிக ஆனந்தத்தை உற்பத்தி செய்யும்.**

- ❋ ***மட்டம் உயர்வின் திட்டம்.***
- ❋ ***வெறுத்து விலகியதை விரும்பி நாடும் மனிதன்.***

செயல் திருவுருமாற்றத்தால் எதிரான பலனைக் கொடுக்கும். திருவுருமாற்றம் பகவான் உலகுக்கு அளித்த புதிய வரப்பிரசாதம். புத்தர் நோய்வாய்ப்பட்டவனால் மனம் மாறி ஞானம் பெற்றபின், நோயை அழிக்க முயன்றார். அவருடைய ஞானத்தை ஏற்றுக்கொண்டது உலகம். ஏன் நோயை ஆரோக்கியமாக மாற்றக் கூடாது என நினைவு எழவில்லை. துன்பம் வந்தால் மனிதன் அதைப் போக்க முயலுவான். அதை இன்பமாக மாற்ற வேண்டும் என்று நினைப்பதில்லை. பல இலட்சம் கடன் உள்ளவன், உழைத்துக் கடனை அடைக்க முயலும்பொழுது, எப்படி இத்தனை இலட்சம் கைமீதியாகும் என நினைப்பதில்லை. அதுவும் இக்கடன், கைமீதியாக மாறும் என்ற எண்ணம் இன்று உலகில் இல்லை. இவை வாழ்வின் அம்சங்கள்.

பகவான் திருவுருமாற்றம் (reversal of consciousness, transformation) என்பது மரணம், இறவாமையாக மாறுவது போலுள்ள அம்சங்களாகும். அது போன்றவை,



| | | |
|---|---|---|
| உலகம் | ................................ | பிரபஞ்சமாவது |
| மரணம் | ................................ | இறவாமை |
| நோய் | ................................ | ஆரோக்கியம் |
| ஜடம் | ................................ | சச்சிதானந்தம் |
| சோகம் | ................................ | ஆனந்தம் |
| மனம் | ................................ | சத்திய ஜீவன் |
| எண்ணம் | ................................ | மௌனம் |
| உணர்வு | ................................ | அன்பு |
| இயலாமை | ................................ | அளவிறந்த திறமை |
| வரம்புக்கு உட்பட்டது | ................................ | வரம்பில்லாமல் அளவு கடந்தது |
| மனிதன் | ................................ | சத்தியஜீவன் |

இது யோகத் தத்துவமானால் நம் அன்றாட வாழ்வில் சிறியது, பெரியதாகவும்; வேண்டாதது, வேண்டியதாகவும்; உபத்திரவம் உதவியாகவும்; வெறுப்பு, நட்பாகவும் மாறுவது திருவுருமாற்றமாகும். அன்பர்கள் அன்றாட வாழ்வில் இதுபோன்ற நிகழ்ச்சிகளை அடிக்கடி பார்க்கிறார்கள். எந்த முதலாளி, தொழிலாளியை நீக்கினாரோ, அவர் பிறகு தொழிலாளியின் நிலை மாறியதால் அவனிடமே உதவி கேட்கிறார். நம்மைக் குறைவாகப் பேசியவர்களே உயர்வாகப் பேசுகிறார்கள். இவையெல்லாம் பக்தர் அறிவது. இங்குக் குறிப்பாகச் சொல்லப்படுவது சற்று மாறானது.

நம்மிடம் பகைமை பாராட்டும்பொழுதும் அதற்கும் ஒரு முறையுண்டு. பகையை உயர்ந்த முறையிலும் வெளிப்படுத்தலாம், மட்டமாகவும் வெளிப்படுத்தலாம். மட்டமான முறையில் பகையை வெளிப்படுத்தும்பொழுது மனம் புண்படுகிறது. பகை, கோபத்தை மூட்டும். மட்டம் மனத்தைப் புண்படுத்தும். இதுபோன்ற நிகழ்ச்சிகளில் திருவுருமாற்றம் செயல்படும் விதத்தை மேலே குறிக்கின்றேன்.

குடிதண்ணீரில்லாத ஊரில் எப்படி விவசாயம் செய்யமுடியும் என்ற நிலை திருவுருமாற்றமடைந்ததால், தண்ணீர் அபரிமிதமான ஊராக அது மாறியது. பெரிய ஸ்தாபனத்தில் இரண்டாம் நிலையில் முதன்மையாக இருப்பவரை அனைவரும் நேரடியாகவும், உளமார வெறுத்தனர். அவரிடம் ஏற்பட்ட திருவுருமாற்றம் அவரை முதல் நிலையில் முதன்மையானவர்க்குக் கிடைக்காத புகழைப் பெற்றுத் தந்தது. புகழில்லாதவர், புகழடைவது வளர்ச்சி. கெட்ட பெயர் நல்ல பெயராக மாறுவது திருவுருமாற்றம். பயிரிட நீர் வசதியில்லை என்பது ஒரு நிலை. குடிக்க தண்ணீர் இல்லை என்றால் மோசமான நிலை. அது திருவுருமாற்றமடையும்பொழுது, நீர் கிடைத்தால் பெரியது. ஆனால் அபரிமிதமான நீர் கிடைத்தது. எவ்வளவுக்கெவ்வளவு தாழ்ந்த நிலையிருக்கிறதோ அது திருவுருமாற்றமடையும்பொழுது, அவ்வளவுக்கவ்வளவு உயர்ந்து விடுகிறது என்பது தத்துவம்.

* * *

**674) தாழ்ந்த பண்புகளை விட்டொழித்த பின்னரே உயர்ந்த பண்புகள் பலிக்கும். உயர்ந்தவற்றை ஏற்றுக்கொண்ட பின்னரும், தாழ்ந்தவற்றின் மீது ஆசையும், பெருமையும் மனிதனை விடாது. ஜனநாயகம் வந்த பின்னும் போருக்கு மரியாதையிருக்கிறது. சன்னியாசத்தை மேற்கொண்ட பின்னும் பணத்திற்குண்டான மரியாதை போவதில்லை.**

*விட்ட குறை தொட்ட குறை.*

இங்கிலாந்தில் முடியாட்சியை ஒழித்து குடியாட்சியை நிறுவ மன்னரைக் கொலை செய்தனர். ஜனநாயகம் பிறந்தது. கொஞ்சநாள் கழித்து இறந்த மன்னர் மகனைத் தேடிக் கண்டுபிடித்து சிம்மாசனத்தில் அமர்த்தினார்கள். இன்றும் இங்கிலாந்தில் மன்னரே நாட்டின் தலைவர். அழித்த அரசனை மீண்டும் தேடிக் கண்டு இரு நூற்றாண்டாகப் போற்றுகின்றனர். உலகம் ஒரு பழக்கத்தை லேசில் கற்றுக் கொள்வதில்லை. கற்றுக் கொண்டதை லேசில் விடுவதில்லை.



மனம் மீண்டும் மீண்டும் நாம் கைவிட்டதை நாடும் தன்மையுடையது. 1930க்கு முன் கெஜட் பதவி ஆபீசர்களில் பலர் ஆங்கிலேயராக இருந்தனர். அதனால் அவர்களை 'துரை' என்பார்கள். 1950க்குள் இந்நிலை மாறியது. இலாக்கா தலைமை தவிர மற்ற பதவிகளை இந்தியர்களுக்குக் கொடுக்க ஆரம்பித்தனர். 1970வரை கெஜட் பதவி ஆபீசரை 'துரை' என்று குறிப்பிடும் பழக்கம் இருந்தது. 'துரை' போன பின்னும், அவரிடத்தில் நம்மவர் வந்த பின்னும் பழைய பெயர் முழுவதும் மாறுவதில்லை.

அதேபோல் தாழ்ந்ததை விட்டு, உயர்ந்ததை மேற்கொண்ட பின்னும், மனம் பழைய நிலையை விரும்பும், போற்றும். மனத்தைப் பொறுத்தவரை தாழ்ந்தது, உயர்ந்தது என்பதைவிட பழகியதை விட முடியாது என்பதே அதன் நிலை.

முடியாட்சி இருந்த நாளில் 'வீரன்' என்பவன் சிறந்தவன். வீரம் ஏற்பட்டு பிரபலமாகி, 'வீரன்' ஏற்பட்டு, வீரன் தலைவனாகி, அரசன் ஏற்பட்டது சரித்திரம். மனிதகுலம் நாகரீகம் பெறுமுன் மக்கள் கூட்டமாக வாழ்ந்த நாளில் கூட்டத்தைக் காப்பாற்றுவது முக்கியம். கூட்டத்தைக் காப்பாற்றினால்தான் உயிர் பிழைக்கலாம். எதிரிகளின் கூட்டத்திலிருந்தும், காட்டு விலங்குகளிலிருந்தும், எல்லோராலும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியாது. காடு என்று எங்கோ மலையடிவாரத்தில் பல நூறு மைலுக்கு அப்பாலுள்ளது இக்காலம். உலகமே காடாக இருந்தது அந்த நாள். காட்டில் மனிதன் வாழ்ந்தான். காட்டை அழித்து நாட்டை உற்பத்தி செய்தான். நாலு மைல் அகலத்தில் ஊர் இருந்தால் ஊரின் எல்லையில் காடு. இரு ஊர்களுக்கிடையே காடு. எனவே எந்த நேரமும் காட்டுவிலங்கால் உயிருக்கு ஆபத்து. புலியைக் கொன்று, புலிப் பல்லை எடுத்தவன் வீரன். வீரனை மணக்க நங்கை விழைவாள். தான் வீரன் என்று நிரூபிக்கும் புலிப் பல்லை அவள் கழுத்தில் அணிந்து அவளை மணப்பது ஒரு வகை. அப்படி ஏற்பட்டதே இன்றைய தாலி என்று ஒரு செய்தி. வீரன் எதிரிகளிடமிருந்து காப்பாற்றுவதால் வீரனே தலைவன். அவன் கூறுவதே நியாயம். இரு வீரர்கள் மாறுபட்டால் மல்யுத்தம் நடக்கும். ஜெயிப்பவன் நியாயஸ்தன். இது ஆதிகாலத்து நியாயம். நியாயம்

ஜெயிக்கும் என்பது ஜெயித்தவன் நியாயம் என்றாயிற்று. இது ஆயிரம் ஆண்டு பழக்கம். இன்றும் இருவர் மாறுபட்டால், "வா, சண்டை போடலாம், யார் ஜெயிக்கின்றார்கள் பார்க்கலாம்'', என்ற உணர்வுக்குப் பெருமையுண்டு. நியாயத்திற்கும், அபிப்பிராயத்திற்கும், அறிவின் தெளிவுக்கும், உடல் வலிமைக்கும் எப்படி தொடர்புண்டு? இன்றுவரை மனித நியாயம் இப்படியே வழங்குகிறது.

சன்னியாசி அனைத்தையும் துறந்தவன். வேந்தன் அவனுக்குத் துரும்பு. ஒரு புதிய ஊருக்குப் போனால், தங்க சன்னியாசி 'இந்த ஊரில் யார் செல்வர்' என்று விசாரித்து அங்கு போய்த் தங்குகிறான். தன்னைப் பார்க்க வருபவர்களில் பணம் உடையவர்க்கு அதிக கவனம் செலுத்தும் சன்னியாசிகள் உண்டு.

தான் கைவிட்ட கருத்துக்களை, இலட்சியங்களை இன்னும் பெருமையுடன் கருதுவது மனித மனம். மனம் மாறினாலும், உணர்வு மாறுவதில்லை. உணர்வு மாறினாலும் பழக்கம் மாறுவதில்லை. அனைத்தும் மாறிய பின்னரே, அன்னை வருவார். பகவானுடன் நெடுநாள் இருந்தவர் தாம் போட்டிருந்த பூணூலைக் கூட விட முடியவில்லை. இதுவே மனித சுபாவத்தின் உண்மை.

❋ ❋ ❋

**675) Systems முறைகள் முதலில் அதிகப் பலன் தரும். பிறகு ஜீவனிழந்து பலனற்றதாகும். முறைகள் நம்மால் ஏற்படுத்தப்பட்டவை என்பதால், அவை செயல்படும் வகையைச் சற்று விரிவுபடுத்தி மீண்டும் அவற்றிற்கு ஜீவன் அளிக்க முடியும். கொடுமையும், அதிகாரமும் செல்வாக்கை இழந்துவிட்ட போதிலும், அவற்றிலுள்ள தீவிரப் பணிவை வளர்த்து மீண்டும் அவற்றைப் பயனுள்ளதாகச் செய்யமுடியும்.**

*பயனற்ற முறைகளையும் ஜீவனுள்ளதாகச் செய்யலாம்.*



முறைகள் என நான் இங்கு குறிப்பிடுவது திருமணம், சொத்துரிமை, மதம், பேரம், கடன், குடும்பம் போன்ற சமூக அமைப்புகள். உரிமை ஏற்பட்டு, சொத்துரிமை வந்தது. அதனால் வாரிசு ஏற்பட்டது. இவை ஏற்பட்ட ஆரம்பத்தில் ஜீவனுள்ள சிறப்புடன் விளங்கின. கூட்டம் குடும்பமாகிய காலத்து, நாம், நம் குடும்பம் என்ற பாசம் எழுந்து பண்பாயிற்று. எந்த நிலத்தில் யார் பயிரிடுவது, யார் எந்த மரத்தடியில் குடியிருப்பது, வீடு, குகை என்று இருந்தால் அதை யார் பயன்படுத்துவது என்ற முறையில்லாத காலத்தில் வலிமையுள்ளவன், வலிமையற்றவனை அவனிடத்திலிருந்து விரட்டிவிட்டு அவன் நிலத்தை, வீட்டை ஆக்கிரமித்துக் கொண்டான். சொத்துரிமை என்று ஏற்பட்டபொழுது, வலிமையற்ற அனைவருக்கும் பாதுகாப்பு ஏற்பட்டது. நிம்மதி ஏற்பட்டது. அதுவே நாகரீகமாக நாம் இன்று வாழ்ந்து வருகிறோம். ஜீவனோடு எழுந்த இம்முறைகள் நாளாவட்டத்தில் ஜீவனற்றுப் போகின்றன.

பாசத்தை வளர்க்க ஏற்பட்ட குடும்பம், இன்று மாற்றாந்தாய்க்கு பையனைக் கொடுமைப்படுத்தும் வாய்ப்பை அளிக்கிறது. நியாயத்தை பாதுகாக்க ஏற்பட்ட சொத்துரிமை, நிலத்தைப் பயிரிட முடியாத சோம்பேறிக்கு இன்று வாரிசு என்பதால் நிலத்தைக் கொடுக்கிறது. அதனால் குடும்பம் நஷ்டமடைகிறது. திருமணம் என ஒன்று ஏற்படாத நாளில் கணவன், மனைவி என்பதேயில்லை. அதனால் வியாதிகள் பரவி அகால மரணம் ஏற்பட்டது. குழந்தைகளைக் காப்பாற்றும் பொறுப்பைப் பெற்றவன் ஏற்பதில்லை. அது விலங்கின் வாழ்வு. திருமணம் எனும் அமைப்பு, குடும்பம், கணவன், மனைவி, பெற்றோர், குழந்தைகள் என்பதை ஏற்படுத்தியதால், கட்டுப்பாடு, பொறுப்பு, பாசம் உண்டாகி மனிதன் உயர்ந்துவிட்டான். திருமணம் ஏற்படாதபொழுது, குழந்தைகளைக் காப்பாற்ற தகப்பனார் இல்லை. ஆனால் தாயார் யார் உதவியாலும் குழந்தைகளைக் காப்பாற்ற முடிந்தது. திருமணம் ஏற்பட்ட பின், கணவன் இறந்துவிட்டால் அவள் நிற்கதியாகி நிற்கிறாள். குழந்தைகளை வேறொருவர் மூலம் காப்பாற்ற "திருமணம்'' என்ற அமைப்பு தடையாகிறது. எந்தத் திருமணம் குழந்தைகளைக் காப்பாற்ற ஏற்பட்டதோ, அதே திருமணம், மனைவி

கணவனை இழந்த நிலையில், குழந்தைகளைக் காப்பாற்ற தடையாயிருக்கிறது.

படிப்பு என்ற முறை பட்டம் பெற்றுத் தந்தது. 80 வருஷத்திற்கு முன் B.A. படித்தவனை தேவராகக் கருதினார்கள். பட்டத்திற்கு மரியாதை அதிகமாக இருந்ததால் பட்டத்தையே பெயராகவும் ஏற்படுத்தினார்கள். லால் பகதூர் என்பவர் சாஸ்திரி பட்டம் பெற்றபின் அவரை சாஸ்திரி என்று அழைத்து லால்பகதூர் சாஸ்திரி என்றாக்கினார்கள். இன்று பட்டம் உண்டு. அதற்குரிய படிப்பில்லை. பட்டம் என்ற முறை ஜீவனிழந்து களையிழந்துவிட்டது.

களையிழந்த முறைகளைக் கைவிட்டு உலகம் புது முறைகளை நாடுகிறது. புது முறைகளை ஏற்க முடியாமல், பழைய முறை திறன் இழந்த காலத்தில், பழைய முறையின் அடிப்படையைச் சற்று விரிவு படுத்தினால் அது மீண்டும் உயிர்பெற்றுக் களையோடு அமையும். உதாரணமாக, B.E. பட்டம் பெறுமுன் முதல் மாணவரையும், முன்னணி மாணவர்களையும் கம்பனிகள் ஏற்றுக் கொள்கின்றன. இன்ஜீனியரிங் கல்லூரி மாணவர்களை முதல் ஆண்டிலிருந்து கம்பனிகள் ஏற்கும் அமைப்பை உற்பத்தி செய்தால், மாணவர்கள் திறமையைத் தேடுவார்கள். இன்று போன களை அன்று திரும்பி வரும்.

கொடுமை பயங்கரமானது. அதுவும் ஒரு முறையாக இருந்த காலம் உண்டு. கொடுமைக்கு மனிதன் பணிந்தான். பணிவு உயர்ந்தது. பணிவைப் போற்றினால் கொடுமையும் மாறி பலன் தரும். இராணுவத்தில் பணிவு முக்கியம். அதனால் ராணுவ வீரர்கள் சிறந்த திறமையுடன் விளங்குகின்றனர்.

ஜீவனற்ற முறைகளை அவற்றுள் உள்ள வித்தான நல்ல அம்சங்களைப் பாராட்டுவதால் மீண்டும் ஜீவனுள்ளதாகச் செய்ய முடியும்.

*தொடரும்...*

***



# இம்மாதச் செய்தி

**அம்மா, என் அந்தரங்கம் நீ அறிவாய்.**

**நீ அறிவாய் என நான் அறிவேன்.**

**இருந்தும் அங்கு உன்னை இதுவரை நான்**

**அனுமதிக்கவில்லை. அனுமதிக்க மனம் வரவில்லை.**

**"என் அந்தரங்கத்தை அழித்து நீயே என் அந்தரங்கமாக வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்."**

**அகந்தையான அந்தரங்கம் அன்னையாக வேண்டும்.**

**May my ego be dethroned from the inner sanctum and Mother occupy it.**

***

## ஜீவிய மணி

மந்திரத்தால் மயக்கமுற்றவனின் மேல் மனம் தூங்கி, அடி மனம் விழிக்கிறது.

## தத்துவக் கல்லூரி

நம் நாட்டில் 270 பல்கலைக்கழகங்கள் உள்ளன. அமெரிக்காவில் 800 பல்கலைக்கழகங்கள் உள்ளன. சில உலகப் பிரசித்தி பெற்றவை. 20,000 முதல் 75,000 வரை மாணவர்கள் இருப்பார்கள். பேர் பெற்ற பல்கலைக்கழகங்களில் சில நோபல் பரிசு பெறுமிடங்களாக அமைந்துள்ளன. இவற்றின் தரம் அதிகம். அட்மிஷன் கிடைப்பது கடினம். நம் நாடுபோல் அங்கு சிபார்சில்லை.

அவற்றுள் சில classical schools எனப்படும். லத்தீன், கிரேக்க, சமஸ்கிருத மொழிகட்கு classical மொழிகள் எனப் பெயர். இன்றைய பாடங்களை முக்கியமாகக் கருதாமல் சாக்ரடீஸ், மார்க்கஸ் ஒரேலியஸ், டான்டே, அரிஸ்டாடில் போன்ற அறிஞர்கள் எழுதியவை, அக்காலத்து மொழிகள், ஆகியவற்றை 500 ஆண்டுகட்கு முன் படித்ததுபோல் படிக்க விரும்பும் மாணவர்கள் சேரும் கல்லூரிகள் இவை. நாம் மெடிகல் காலேஜ் என்பதை அவர்கள் மெடிகல் ஸ்கூல் என்பதுபோல் இவற்றை classical ஸ்கூல் என்பார்கள். அந்நாட்டில் 10 அல்லது 12 கல்லூரிகள் இது போன்றவை. வாழ்க்கை, வேலைக்கு சம்பந்தமான படிப்பு இல்லை என்பதால் பொதுவாக மாணவர்கள் இக்கல்லூரியை விலக்கி விடுவார்கள். படிப்பு வேண்டும், அறிவு வளர வேண்டும் என்று வசதியும், புத்திசாலித்தனமும் உள்ள மாணவர்கள் இக்கல்லூரிகளை நாடுவர்.

**இடம் கிடைப்பது அரிது, மிகவும் சிரமம்.**

புரொபசர் மாணவனை நேரில் கண்டு தரமானவன் என



முடிவு செய்தாலன்றி கல்லூரியில் இடம் கிடைக்காது. நம் அன்பர் இந்தியா வந்து திரும்பினார். இங்கிருக்கும்பொழுது சில மாதங்கள் The Life Divine பயின்றார். அதில் முக்கியமான,

1. Process of creation சிருஷ்டியின் இரகஸ்யம்.
2. Theory of creation சிருஷ்டியின் தத்துவம்.
3. Secret of creation சிருஷ்டி ஏற்பட்ட காரணம்.
4. Spirit, Supermind, mind, life, matter ஆன்மா, சத்திய ஜீவியம், மனம், வாழ்வு, ஜடம் உற்பத்தியான வகை.
5. பிரபஞ்சச் சிருஷ்டி, பிரம்ம சிருஷ்டி

பகுதிகளைப் பயின்றார். அவற்றில் சிலவற்றைக் கட்டுரைகளாக எழுதினார். அவர் விமானத்தில் அடுத்தாற்போல் அமர்ந்தவர் இது போன்ற classical schoolஇல் பயின்றவர் என்று தெரிந்தவுடன் மேற்கூறிய கருத்துக்களைப் பற்றிக் கூற முயன்றார். ஆர்வத்துடன் கேட்டதால் தொடர்ந்து பேசினார் அன்பர். பயணம் முடிந்த பின் அவர், ‘‘நீங்கள் கூறுவதெல்லாம் நான் படித்ததோ, கேள்விப்பட்டதோ இல்லை. மிக உயர்ந்தவையாக இருக்கின்றன. எப்படி இவற்றை அறிந்தீர்கள்?” எனக் கேட்டார். “நான் இவற்றை எல்லாம் The Life Divine என்ற நூலில் கண்டேன்’’ எனப் பதிலளித்தார்.

‘‘4½ மணி பேசினேன். கண்கொட்டாமல் கேட்டுக் கொண்டிருந்தார். அளவு கடந்த புத்திசாலி. நன்றாகப் புரிவதை நான் கண்டேன். 4½ மணியும் 4½ நிமிஷமாகப் போயின” என்றார் அன்பர்.

❋ ❋ ❋

"ஸ்ரீ அரவிந்தம்"

# லைப் டிவைன்

கர்மயோகி

## X. Conscious Force

We can admit of movement of Force. Page No. 82
Two questions arise. Para No. 7
How did the movement arise?
How in the bosom of existence did it arise?
We may suppose it to be eternal.
It is the very essence of all existence.
If this is so, no questions arise.
We have refused this.
We are aware of an existence.
It is not compelled by the movement.
This movement is alien to the repose.
It is an eternal repose.
How does this movement arise?
By what cause?
By what possibility?
By what mysterious impulsion?

There is an answer. Page No. 82
It is most approved by the Indian mind. Para No. 8
It is Force inherent in Existence.
Shiva and Kali are one.



## 10. சித் - சக்தி

சலனத்தின் சக்தியை நாம் ஏற்க முடியும்.
இரு கேள்விகள் எழுகின்றன.
சலனம் எப்படி ஆரம்பித்தது?
சத் புருஷனில் எப்படி சலனம் உண்டாயிற்று?
அது என்றும் உள்ளதாக நாம் நினைக்கலாம்.
சத் புருஷனுக்கு அது சாரம் எனவும் கூறலாம்.
அது உண்மையானால், கேள்வி எழாது.
ஏற்கனவே நாம் இதை ஏற்க முடியாது எனக் கண்டோம்.
சத் புருஷனை நாம் அறிவோம்.
சலனம் அதைக் கட்டாயப்படுத்த முடியாது.
அதன் அமைதிக்கு இச்சலனம் மாறானது.
அது அனாதியான அமைதியுடையது.
இச்சலனம் எழுவது எங்ஙனம்?
காரணம் என்ன?
எதனால் இது சாத்தியப்படுகிறது?
என்ன விந்தையான உந்துதல் இது?

இதற்குப் பதிலுண்டு.
இப்பதில் இந்தியருக்கு ஏற்புடையது.
சக்தி என்பது சத்தில் உள்ளது.
சிவனும் காளியும் ஒன்று.

**Brahman and Shakti are one.**
**They are not two.**
**They are not separable.**
**Force is inherent in existence.**
**It may be at rest.**
**It may be in motion.**
**At rest, it still exists.**
**It exists nonetheless.**
**It is not abolished.**
**Not diminished.**
**Not essentially altered.**
**This reply is rational.**
**It is entirely so.**
**It accords with the nature of things.**
**We need not hesitate.**
**We can readily accept it.**
**Here is an existence.**
**It is infinite.**
**We cannot say Force is alien to it.**
**Nor can we say it entered from outside.**
**"It was originally non-existent."**
**"It arose later at some time."**
**These are unacceptable.**
**The illusionist has a theory.**
**It admits of Maya.**
**Maya is power of self-illusion in Brahman.**
**It is potentially eternal.**
**It is in the eternal Being.**



**பிரம்மமும், சக்தியும் ஒன்று.**
**இவை வேறானவையல்ல.**
**இவற்றைப் பிரிக்க முடியாது.**
**சக்தி சத்தில் உள்ளது.**
**அது அசைவற்றுள்ளது.**
**அது அசையக் கூடியது.**
**அசைவற்ற பொழுதும் சக்தியுள்ளதன்றோ?**
**எப்படியும் சக்தியுள்ளது.**
**அதை அழிக்கவில்லை.**
**அது குறையவில்லை.**
**அடிப்படையில் மாறவில்லை.**
**இப்பதில் அறிவுக்குரியது.**
**முழுமையானது.**
**நாம் காண்பதற்கு ஒத்து வரக்கூடியது.**
**இதை ஏற்க நாம் தயங்க வேண்டாம்.**
**இதை உடனே ஏற்கலாம்.**
**சத் புருஷனை நாம் அறிவோம்.**
**அது அனந்தம்.**
**சக்தி அதற்குரியதன்று எனக் கூற முடியாது.**
**சக்தி வெளியிலிருந்து சத்தினுள் நுழைந்தது எனவும் கூற முடியாது.**
**"ஆரம்பத்தில் சக்தியில்லை."**
**"பிற்காலத்தில் சக்தி உற்பத்தியாயிற்று."**
**இப்படி எல்லாம் கூறுவது சரியில்லை.**
**மாயாவாதிக்கொரு தத்துவம் உண்டு.**
**அது மாயையை ஏற்கும்.**
**பிரம்மம் தன்னை ஏமாற்றும் வகை அது.**
**அதுவும் வித்தாக என்றும் உள்ளது.**
**அனந்தமான புருஷனில் உள்ளது மாயை.**

**There is only one question.**
**It is manifestation or non-manifestation.**
**The Sankhya asserts the coexistence.**
**It is a coexistence of Prakriti and Purusha.**
**They are Nature and Conscious-Soul.**
**It is rest and movement.**
**It is the rest of equilibrium of Prakriti.**
**Movement is disturbance of equilibrium.**

*contd…*

## ஸ்ரீ அரவிந்த சுடர்

தன் எதிர்காலத்தைத் தானே நிர்ணயித்து, இறைவனின் திருவுருமாக அதை உருவாக்கும் திறமையை மனிதன் பெற்றிருந்தாலும், தன் பழக்கப்படி வாழவே அவன் விரும்புகிறான். அதுவும் திருவுள்ளமே.

*இறைவனாக அதிர்ஷ்டமிருந்தாலும், மனிதனாக வாழ ஆசையிருக்கிறது.*



**கேள்வி ஒன்றுதான்.**
**எப்பொழுது வெளிவரும்?**
**சாங்கியம் புருஷனும் பிரகிருதியும் ஒரே சமயத்திலுள்ளவை என்று கூறுகிறது.**
**???**
**இயற்கை, ஆத்மா எனவும் நாம் கூறலாம்.**
**சலனம், அமைதி எனவும் கூறலாம்.**
**பிரகிருதியின் சலனமற்ற அமைதி எனலாம்.**
**அவ்வமைதிக்குப் பங்கம் விளைவிப்பது சலனம்.**

*தொடரும்....*

## ஸ்ரீ அரவிந்த சுடர்

சிந்தனை எழுமிடத்தைக் கண்டு அதைச் சரண் செய்தால் எண்ணம் அழியும். எண்ணத்தில் அமைப்பைக் (structure) கண்டு, அதிலிருந்து மன எழுச்சியின் சக்தியை அகற்றினால், அமைப்பு கரையும். அடுத்த நிலையில் அதே போல் மனம் கரையும்.

*சிந்தனையை அழித்து, அமைப்பையும் அழித்து மனத்தை அழிக்க வேண்டும்..*

## $ 500 மில்லியன்

சுமார் 15 வருஷமாக நாம் consultancy என்ற தொழிலை மேற்கொண்டுள்ளோம். இது அத்தனையும் அன்னை வடிவமானது. நம் clients பொதுவாகச் சிறு தொழில்களை நடத்துபவர்கள். பொதுவாக நாம் அவர்கள் இலாபத்தை இரண்டு மடங்காக்க ஒப்புக் கொள்வோம். உண்மையில் அது 10 அல்லது 20 மடங்காக உயரும். இவர்கள் மேல் நாட்டு client என்பதால் Motherஐப் பற்றிப் பேச முடியாது. அத்துடன் consultancy முறைகளுக்கு ஜீவனளிப்பது நம்பிக்கை (faith). தொழிலில் அபரிமிதமான முன்னேற்றம் அடைந்தவர்கட்கு இந்த நம்பிக்கை இயல்பாக இருக்கும். ஹிப்பி இயக்கத்தில் எழுந்தவர்கள், மேல்நாட்டார், அதிகம் படித்தவர்கள், தொழில் நடத்துபவர்கள் ஆகியோருக்கு ஜீவனுள்ள எந்த முறையும் ஒத்து வாராது. அறிவுக்குப் பொருத்தமான முறைகளைக் கேட்பார்கள். **ஜீவனுள்ள முறைகளை அறிவுக்கு பொருத்தமாக மாற்றிக் கூறினால் ஜீவனற்றுப் போகும்.** இவர்கள் அனைவரும் தொழிலில் 15% முன்னேற்றத்தைப் பெரியதாகக் கருதுவதால் 100% உபரி மிகவும் திருப்தியாக வரும்.

இவர்களுள் ஒருவர் பக்தர், 6, 7 ஆண்டுகட்கு முன் புதுவை வந்திருந்தார். தொழிலில் 100% முன்னேற்றத்தைக் கண்டவர் என்பதால் நம்மை இவர் consultingக்காக அழைத்தார். உபரி லாபத்தில் 50% தருவதாகச் சொன்னார். நம் fees 25% என்பதால் அதற்கு மேல் பெற நாம் சம்மதிக்கவில்லை. அன்று இவர் தொழில் 12 மில்லியன் டாலர். 20க்குப் போகப் பிரியப்பட்டார். இவர் பக்தராக இருப்பதால் $ 50 மில்லியனுக்குப் போகலாம், முறைகளைத் துல்லியமாகப் பின்பற்றினால் $ 500 Millionக்கு 5 ஆண்டில் போகலாம் என நான் கூறியது நம் நண்பர்கட்கு நம்பிக்கைப் படவில்லை. இவர் என்ன நினைத்தாரோ தெரியாது. நாம் நம் consultancyயை ஆரம்பிக்கு முன் பார்ட்னருடன் தகராறு வந்து முழுத் தொழிலையும் தானே வாங்க வேண்டிய நிலை வந்துவிட்டது. அதே நேரம் இது போன்ற தொழில்கள் மூட ஆரம்பித்தன.



ஒருவாறு சிரமப்பட்டு பார்ட்னரிடமிருந்து பங்கை வாங்க 4, 5 வருஷங்காயின. மார்க்கெட் சரிகிறது. வருஷம் 20% வியாபாரம் குறைகிறது. இவர் தத்தளித்திருக்கிறார். சிரமத்தைக் கடந்து வந்து மீண்டும் நம்மை அழைத்தார். இம்முறை நாம் நம் முறைகளை வற்புறுத்த முடிவு செய்தோம். அத்துடன் பக்தர் என்பதால் அழைப்பை மேற்கொள்ள வேண்டும் எனவும் கூறினோம். ஓரிரு வருஷமாக சிறு முன்னேற்றம், சென்ற ஆண்டு தொழிலில் 3000 பேருள்ள பொழுது இலாபம் என மிகச் சிலரே சம்பாதித்தபொழுது இவருக்குக் கணிசமான இலாபம் வந்தது. இந்த நேரம் ஒரு செய்தி கிடைத்தது.

13 ஆண்டுகளுக்கு முன் இவர்கள் மகாநாட்டுக்கு இத்தொழிலைச் சேர்ந்தவர் $ 3 million கடைக்காரர் வந்திருந்தார். நாம் மகாநாட்டில் எழுதிய, பேசிய அத்தனை விவரங்களையும் பாராட்டிப் பேசினார். கவனமாகச் சேர்த்துக் கொண்டார். அதுபோல் செய்த பலரில் அவரும் ஒருவர். எல்லா மகாநாடுகளுக்கும் வருவார். நாம் அங்கிருந்தால் சந்தித்துப் பாராட்டுவார். நம்மை அவர் consultant ஆக அழைக்கவில்லை. சென்ற மாதம் இவர் கம்பெனி அளவு கடந்து பெருகியுள்ளது. ஏராளமான கம்பனிகளை - 3, 4, 10 மில்லியன் டாலர்

கம்பனிகளை - இவர் வாங்கி $ 450 மில்லியன் கம்பனியாக்க இருக்கிறார் என்பது இவரைப் பற்றிய செய்தி. மார்க்கெட் சரிகிறது. பலர் கடையை மூடுகின்றனர். இவர் நம்மை அழைக்கவில்லை. ஆனால் நம் முறைகளைக் கருத்தாகப் பின் பற்றுவதாகக் கூறுகிறார், பாராட்டுகிறார். 3லிருந்து 450க்கு வந்துவிட்டார். நம் அன்பருக்கு நாம் நினைத்தது இவருக்குப் பலித்துவிட்டது. சென்ற வாரம் மேலும் $ 200 மில்லியன் கடைகள் பலவற்றை வாங்கியுள்ளார் என்றும் செய்தி வந்தது. மந்திரி பதவி, கோடீஸ்வரத் திட்டம், வைஸ்சான்ஸலர் பதவி, உலகப் பரிசு போன்றவை பல நாம் அன்பர்கட்காக ஏற்பாடு செய்தால் அவரருகிலுள்ளவர்க்குப் போவது நம் அனுபவம். சில அன்பர்களும் பெறுவதுண்டு. அன்பர்களைவிட அடுத்தவர்க்கு நம்பிக்கை அதிகம் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

❋ ❋ ❋

### ஸ்ரீ அரவிந்த சுடர்

கனிந்த ஆத்மாக்கள் வாழத் தெரியாதவர்கள். புரட்சி வீரர்கள், வக்ர புத்தியுடையவர்களாக இருப்பதுண்டு. சமூகத்தில் ஏற்றுக் கொள்ள முடியாத ஓர் அம்சமாவது உள்ளவர்கள் இவர்கள்.



## அன்பர் கடிதம்

**ஓம் நமோ பகவதே.**
**ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தாய நமஹ.**

நான் 1994 செப்டம்பர் முதல் அன்னையை வழிபட்டு வருகிறேன். அன்னையால் எனக்கு என் வாழ்வில் சில சம்பவங்கள் நடந்துள்ளன. நான் 1 வருடமாக அன்னையை மட்டும் வழிபட்டு வருகிறேன். 1998இல் என் மாமியார் நடக்க முடியாமல் ரொம்பவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். நான் அப்போது அன்னையிடம் என் மாமியாரின் உடல்நிலை குணமாக வேண்டும். அவர் மீண்டும் நடக்க வைப்பது நீங்கள்தான் என கேட்டுக் கொண்டு உறங்கிவிட்டேன். ஆனால் அன்னை அன்று இரவு என் கனவில் எனக்குத் தெரிந்த ஒருவர் வடிவத்தில் வெள்ளை உடை அணிந்து ஸ்படிகமாலையும் அணிந்திருந்தார், கையில் செம்பருத்திப் பூ, தட்டு நிறைய (ஆரஞ்சுக் கலரில்) கொண்டு வந்து கொடுத்துவிட்டு என் மாமியார் உடலைத் தடவிவிட்டு இனி ஏதும் இருக்காது, நாளை நன்றாகி விடும் என்று கூறினார். மறு நாள் நான் மாலை ஆபீஸிலிருந்து வீட்டுக்கு சென்றபோது என் மாமியார் சமையலறையில் தானே டீ போட்டுக் குடித்துக் கொண்டிருந்தார். இது அன்னையால்தான் நடந்தது.

2000ஆம் வருடம் ஜுன் மாதம் நான் சில நகைகளை மீட்க வேண்டியிருந்தது. அதற்குப் பணம் கிடைக்காமல் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். அன்னையிடம் ஜுன் 10ஆம் தேதிக்குள் எனக்குப் பணம் வந்து நான் நகைகளை மீட்க வேண்டும் மதர், நீங்கள்தான் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்

கொண்டேன். அதன்படி என்னுடைய அலுவலகத்தில் பணிபுரியும் ஒருவர் அந்தப் பணத்தை தந்து உதவினார். நானும் நகைகளை மீட்டுவிட்டேன்.

2001ஆம் ஆண்டு நான் குடியிருக்கும் வீட்டை விட்டுப் பக்கத்து போர்ஷன் ஒன்றிற்குச் செல்ல ஆசைப்பட்டேன். ஆனால் ஏற்கனவே அது விஷயமாய் நான் நினைத்துப் பார்த்து கிடைக்காது என விட்டுவிட்டேன். ஆனால் இப்போது அந்தப் போர்ஷனுக்கே மீண்டும் செல்ல வேண்டும் என்று எண்ணம் உறுதியாகி விஷயத்தை மதரிடம் சமர்ப்பித்தேன். ஆனால் ஏற்கனவே அதிக வாடகை தந்துவிட்டுச் சென்ற அந்தப் போர்ஷன் நமக்குக் கிடைக்குமா, என்று நினைத்து மதரிடம் சொல்லிவிட்டு அந்த வீட்டுச் சொந்தக்காரரை வாடகை தரும்போது கேட்கலாம் எனக் கேட்டபோது ஆமாம் நாங்களும் அதைதான் நினைத்தோம். ஆனால் நீங்கள் அந்த வாடகை தரவேண்டாம். நீங்கள் தர நினைத்த வாடகையைத் தந்தால் போதும், உங்கள் மகன் வேலைக்குச் சென்றபிறகு அந்த வீட்டின் வாடகையை உயர்த்தித் தந்தால் போதும் எனக் கூறிவிட்டார்கள். என்னுடைய ஆனந்தத்திற்கு அளவேயில்லை. உடனே மதரிடம் என் மகன் விரைவில் வேலைக்குச் செல்ல நீங்கள்தான் கருணை காட்ட வேண்டும் எனச் சமர்ப்பித்துவிட்டு அந்த வீட்டிற்கு ஜுன் 2ஆந்தேதி குடிபோய் விட்டேன். இப்போது என்னுடன் மதரும், மதருடன் நானும் அந்த வீட்டில் குடித்தனம் செய்கிறோம்.

ஓம் நமோ பகவதே.

❋ ❋ ❋





## Vol. 5 Centenary Set - Collected Poems

1972இல் ஸ்ரீ அரவிந்தர் நூற்றாண்டு கொண்டாடும்பொழுது ஸ்ரீ அரவிந்தர் எழுதிய அனைத்தையும் 30 வால்யூமாகப் பிரசுரித்தனர். ஸ்ரீ அரவிந்தர் எழுதியவை தத்துவமானதால் நூல் விற்பது கடினம். எத்தனை பிரதிகள் - செட்டுகள் - அச்சடிப்பது என்ற பொழுது அன்னை 5000 செட் அச்சடிக்கப்பட வேண்டும் என்றார். ஆயிரம் விற்பதே சிரமம் என்பதால் நிர்வாகிகள் மலைத்து நின்றனர். 5000 செட் அச்சடிக்கப்பட்டன. அவை விற்றுப் போனதால் சமீபத்தில் அவற்றை மீண்டும் அச்சிடுகின்றனர். அதனுள் 5ஆம் வால்யூமில் ஸ்ரீ அரவிந்தர் எழுதிய எல்லா poems செய்யுள்களும் அச்சடிக்கப் பட்டுள்ளன. “மகாத்மா” என்பது ஒரு கவிதை.

இந்த செட்டில்

The Mother என்பது Vol. 25.

சாவித்திரி இரு வால்யூம்கள் 28, 29.

The Life Divine இரு வால்யூம்கள் 18, 19.

பகவான் எழுதிய கடிதங்கள் மூன்று வால்யூம்கள் 22,23,24.

ஆரம்பக் காலத்தில் பேசியவை, எழுதியவை வந்தே மாதரம் என்ற தலைப்பில் முதல் வால்யூமாக உள்ளது.

தமிழ், சமஸ்கிருதம், வங்காளி, லத்தீன், கிரேக்க மொழிகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவை 8ஆம் வால்யூமாக வெளிவந்துள்ளது.

(தமிழிலிருந்து குறள், ஆண்டாள் பாசுரம், நம்மாழ்வார் பாசுரம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன).

5ஆம் வால்யூமில் “மகாத்மா” என்றொரு செய்யுள் சுமார் 100 வரிகளுள் எழுதப்பட்டுள்ளது. மகான்கள் எப்படி எழுகிறார்கள் என்ற கருத்தை வெறுங்கற்பனையாக எழுதியுள்ளேன் என்று குறிப்பில் பகவான் எழுதுகிறார். செய்யும் குத்துமி என்பவரைப் பற்றியது. இந்த யோக சக்தி பெரியது. உலகில் பெரியவை என்பவற்றைக் கடந்தபின், விட்டொழித்த பின் அடையக் கூடியது, ஹடயோகமும், ராஜயோகமும் இதன் முன் அர்த்தமற்றவை, அந்த சித்திகள் அழிந்தபின் பெற வேண்டியது பூரண யோகச் சித்தி என்ற கருத்து மையமானது. செய்யுளின் கருத்தை கீழே எழுதுகிறேன்.

- ☆ ரிஷிகள் லோகத்திற்குச் சிவன் தலைவர்.
- ☆ என் மக்களான மனித குலம் எனக்குக் கட்டுப்பட்டது.
- ☆ என் பெயர் குத்துமி, நான் க்ஷத்திரியன்.
- ☆ நான் வியாச பகவானைத் தேடி அடைந்தேன்.
- ☆ “இத்தனை ஜென்மங்களாகச் சேகரம் செய்த சித்திகளைக் கொண்டு தெய்வமாகும் பாதையை நாடு. அதன்பின் என்னிடம் வா. இனி உனக்கு மரணமில்லை” என்று வியாசர் கூறுகிறார்.
- ☆ அவர் சொல்லைத் தலைமேல் தாங்கி நான் காட்டையும், மலையையும் அடைந்து ஹடயோகத்தை மூன்று நாளிலும், ராஜயோகத்தை மூன்று நாளிலும் முடித்தேன். வியாசரிடம் திரும்பி வந்தேன்.
- ☆ “நீ கற்றவற்றை கிருஷ்ணபரமாத்மாவைத் தேடி அவனிடம் சரணடைந்து விடு. கிருஷ்ணன் உலகில் ஒளிந்துள்ளான்” என்றார் வியாசர்.
- ☆ உலகெங்கும் தேடினேன், கிருஷ்ணனைக் காணவில்லை. மலைக்குகை ஒன்றில் கண்டேன். கிருஷ்ணன் அங்கு ஓடி விளையாடுகிறான். அவன் காலடியில் வீழ்ந்தேன்.
- ☆ என்னைக் காலால் உதைத்தான். “பிச்சைக்காரா, உன் பரிசை எடுத்துக் கொள்” என்று கொக்கரித்தான்.
- ☆ எனக்கு ஞாபகம் வந்தது. சண்டையும், பூசலும் அழிந்து கிருஷ்ணதரிசனம் யோக ஞானமான அன்பை நான் பெற்றேன்.

❋ ❋ ❋





## பகவான் ஸ்ரீ அரவிந்தர் உடலில் பிரம்மம் சித்தித்தது

*(சென்னை - மாம்பலம் - தியான மையத்தில், 15-8-2001 அன்று திருமதி விஜயா நாராயணன் நிகழ்த்திய உரை)*

அமெரிக்கக் கிராமங்களில் இன்று பெரு நகர வசதிகள் அனைத்தும் உண்டு. மேலும் கிராமப்புற அமைதியிருப்பதால் அதைப் பெரும்பாலும் விரும்புகின்றனர். நகர வாழ்வு கிராமத்தில் பலித்தது என்று கூறும்படி இது அமைகிறது.

கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும் என்ற சொல் இக்கருத்தை எடுத்துக் கூறுகிறது. மகான்கள் பயன்படுத்திய பொருள்களில் அவர்கள் மகத்துவம் இருப்பதும் இதே கருத்து. இந்த ஊரில் எது பெரிய ஒர்க்ஷாப் என்று பெயர் பெற்றதோ, அது ஒரு பெரிய கம்பனியில் மெக்கானிக்காக வேலை செய்தவர் நடத்துவது என்றால், அப்பெரிய கம்பனியின் தரம் அங்கு வேலை செய்த மெக்கானிக்கிடம் காணப்படுகிறது.

உயர்ந்த குடும்பம், பெரிய கம்பனி, சிறந்த ஸ்தாபனம், பெரிய இடம் என்பதற்கு அங்குள்ள மிகச் சிறிய ஊழியருடைய பழக்கமும், அதன் உயர்ந்த பழக்கமாக இருக்கும். அதை நாம் பெரியதன் பெரிய பழக்கம், அதன் கீழ் மட்டத்திலும் காணப்படுகிறது - சித்தித்தது - என்கிறோம்.

உடல், உயிர், மனம், முனிவர், ரிஷி, யோகி, தெய்வம், சத்திய ஜீவியம், ஜீவியம், சத் என்பவற்றைக் கடந்த பிரம்மம் தவத்தால் எட்டப்படுகிறது. எட்டிய பின் தவசி அதனுடன் ஐக்கியமாகிறான். அத்துடன் முடியாமல் எட்டிய பிரம்மம் இறங்கி வருவது பூரணயோகம். படிப்படியாக இறங்கி கடைசி நிலையான உடலில் வந்து தங்குவது உடலில் பிரம்மம் சித்திப்பதாகும்.

சுமார் 100 Peace Corps Volunteers (USA) அமெரிக்கத் தொண்டர்கள் 1968இல் இந்தியாவில் சேவை செய்தனர். அவர்கள் drug உபயோகப்படுத்தக் கூடாது என்று சட்டம். பெரும்பாலோர் பயன்படுத்தினர். 20 பேர் மேல் புகார் வந்து விசாரித்தபொழுது 19 பேர் கஞ்சா சாப்பிடவில்லை என்றனர். ஒரு சாப்பிட்டதை ஒத்துக் கொண்டார். 8 பேரை டிஸ்மிஸ் செய்தனர். அவருள் ஒத்துக் கொண்டவரும் ஒருவர்.

* ஒத்துக் கொண்டவர் சட்டத்தை மீறினார். செயலால் மீறினார்.
* மீறியவர் 19 பேர் சொல்லால் பொய் சொன்னார்கள்.
* ஒருவர் மெய் சொன்னார்.
* மெய் சொன்னவர் செயலில் மெய் சித்திக்கவில்லை - பலிக்கவில்லை.
* மெய் சொன்னவர், சொல்லால் உண்மை பேசியதால் சொல்லில் மெய் பலித்தது; சித்தித்தது.

அவர் கத்தோலிக்கக் கிருத்துவர். சிறுவயதிலிருந்து சர்ச்சுக்குப் போகிறவர். கத்தோலிக்க மதப் பயிற்சியின் உண்மை அவருக்குச் சொல்லில் சித்தித்து வேலை போயிற்று. செயலில் சித்தித்திருந்தால் கஞ்சா சாப்பிட்டிருக்க மாட்டார். அது சொல்லுக்கும், செயலுக்கும் உள்ள மாறுபாடு. நமக்குக் கோபம் வருகிறது. கொட்டி விடுகிறோம். அடக்கிக் கொள்கிறோம். பக்குவத்தாலும், பயிற்சியாலும் ஒரு சமயம் கோபம் வர வேண்டிய இடத்தில் கோபமே வாராவிட்டால், அந்த நேரம், அந்த விஷயத்தில் கோபத்தை வென்றோம். இதற்கு எவ்வளவு நாளாகும்? எந்த நேரமும், எக்காரணத்திற்கும் கோபம் வாராது என்பது தர்ம புத்திரனுக்கும் எட்டாதது, நமக்கு எட்டுவது எவ்வளவு பெரியது. அது எட்டினால் அது நம் கடமையில் ஒரு துளியாகும். அதைக் கடந்த கோபம்போல் வெல்ல வேண்டிய பட்டியலில் ஸ்ரீ அரவிந்தர் 30 விஷயங்களைக் குறிக்கிறார்.

* அறியாப் பருவத்தில் அன்பான ஒற்றுமை வளர்ந்தபின் குறைகிறது.



* சிறு வருமானம் உள்ள நாளில் இருந்த குடும்ப ஒற்றுமை வருமானம் பெருகிய பின் இருப்பதில்லை.
* விவரம் தெரியாத கிராம வாழ்வில் கூட்டுக் குடும்பம் ஒற்றுமையாக இருந்தது. பிறகு விபரம் தெரிய ஆரம்பித்த பிறகு கொஞ்சம் கொஞ்சமாக ஒற்றுமை குறைகிறது.
* படிப்பும், வசதியும், அறிவும் வளரும்பொழுது பக்தி குறைகிறது என்பவை சரித்திரப்பூர்வமான உண்மைகள். ஆன்ம விழிப்பு ஆரம்ப நிலையிலிருந்தபொழுது கடலும், மலையும் கடவுளாகத் தெரிந்தன. இப்பொழுது அவை ஆராய்ச்சிக்குரிய வையாகிவிட்டன. படிப்பு வளரும்பொழுது பக்தியும் வளரலாம். ஆனால் அப்படி வளர்வதில்லை. அப்படி வளர்வது அரிது. அப்படி ஆன்ம விழிப்பு அதிகமானால் அது மேலே போய், மீண்டும் கீழே வரும். அதிகமாக அறியும்பொழுது ஆன்மா அதிகமாக விழிக்கும். அதனால் சிறியதும், பெரியதாகத் தெரியும். அது சித்தி.

**மேலே போய் அதிக விழிப்புப் பெற்று கீழே வந்து ஏற்கனவே சிறியதாய்க் கண்டதை இப்பொழுது பெரியதாகக் காண்பது உச்சகட்டம் அடிமட்டத்தில் சித்திப்பதாகும்.**

* வேத காலத்தில் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தனர். கடலையும், மலையையும் கடவுளாகக் கண்டனர்.
* உபநிஷதம் சர்வம் பிரம்மம் எனக் கண்டது.
* புத்தர் கடவுளில்லை என்றார்.
* கீதை கடவுளைச் சீக்கிரமாக அடையும் மார்க்கமாக சரணாகதியைக் கூறிற்று.
* ஸ்ரீ அரவிந்தம் வேத கால உடலையும், உபநிஷத கால மனத்தையும் கடந்து சத்திய ஜீவியத்தையும், பிரம்மத்தையும் அடைந்து, அங்கேயே தங்கி அதனுடன் கலக்காமல், மீண்டும் இறங்கி வந்து உடலில் பிரம்மம் சித்தித்தது.

* உடல் முதல் சத்வரை வந்து பிரம்மத்தையும் அடைய 12 கட்டங்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் ஜீவியம், substance என இரு பிரிவுகள் உண்டு. இவ்விருபத்தி நான்கு கட்டங்களும் ஒவ்வொன்றும் 100 பாகங்களாகப் பிரியும். உதாரணமாக மனிதன் சமூகத்தில் வாழும் நிலையை அடிமட்டத்திலிருந்து உச்சிவரைக்கும் 100 நிலைகளாகக் கருதலாம். அதில் நாம் 5ஆம் கட்டத்திலோ, 8ஆம் கட்டத்திலோ உள்ளோம். நாம் வாழும் நிலையையும், நம்மைப் போன்ற பலர் வாழும் நிலையையும் பண்பு, படிப்பு, பக்குவம், செல்வம், அந்தஸ்து, ஊர், நாடு, ஜாதி, காலம் கருதி 10 பாகங்களாகப் பிரிக்கலாம். அப்பத்தினுள் நாம் 6ஆம் கட்டத்திலிருந்தால் 7ஆம் கட்டம் உயர முடியும். அதற்கு மலை போன்ற பலன் உண்டு.

**மயிரிழை மனம் உயர்ந்தால் மலையே புரளும்.**

மாதம் 10,000ரூபாய் சம்பாதிக்கும் குடும்பத்தில் சுமாரான சுமுகம், பண்பு இருப்பதாகக் கொண்டால் அதை ஒரு படி உயர்த்த முற்பட்டால்,

— மனைவியிடம் காரம் குறைவாகப் பேசுவது.

— கணவனைச் சீண்டுவதைப் பாதியாகக் குறைப்பது.

— வாங்கிய கைமாற்றை நினைவாகத் திருப்பித் தருவது.

— அதிகாரமாகக் குழந்தைகளை அதட்டுவதற்குப் பதிலாக அன்பாகப் பொறுப்பாகக் கண்காணிப்பது.

— பிறரைக் குறை கூறுவதைப் பெரும்பாலும் குறைப்பது.

— எல்லோருக்கும் நம் சௌகரியத்தை ஓரளவு விட்டுக் கொடுப்பது.

— சுத்தம் அதிகரித்து, சத்தம் குறைவது.

— பிரச்சினை வரும்பொழுது மட்டும் அன்னையை நினைப்பதற்குப் பதிலாக எப்பொழுதும் அன்னை நினைவை தலையாய பணியாக மேற்கொள்வது.



— மனத்தைச் சோதித்துக் கடுமையை இனிமையாக்குவது.

ஆகியவை தேவைப்பட்ட discipline கட்டுப்பாட்டில் மயிரிழையாகும். இதை நாம் மேற்கொண்டால் மனம் அடங்கும், நிலைமை மாறும், சுமுகம் தெரியும், வீட்டில் குரல்களே இனிமையாக மாறும். வீட்டுக்கு வர சலிக்காது. அனைவரும் பின்பற்றினால் வருபவர்களும் “என்ன நடக்கிறது என்று தெரியவில்லையே, ஏதோ மாற்றமிருக்கிறது” என்பார்கள். பெயில் என்பது மறையும், காட்டுக் கத்தல் கேட்காது, “நீ பெரிய ஆள் எனத் தெரியுமே” என்பது போகும். படபடப்பு இருக்காது. சைக்கிள் மோட்டார் பைக்காகும். பெரிய அழைப்புகள் வரும். பிள்ளைகள் பரிசு பெறுவார்கள். பெரியவர்க்குப் பிரமோஷன் வரும். ஏன் மனை வாங்கக் கூடாது என்று ஆரம்பித்து வீடு வாங்குவார்கள். பத்தாயிரம் 50,000 ரூபாய் வருமானமாகும், கார் வரும். “நாங்கள் சொர்க்கத்திலிருக்கிறோம்” என்பார். “இப்பொழுது எல்லாம் சண்டை போடுவதில்லை” என்பார்கள். மயிரிழை மனம் மாறினால் மலையே புரளும் என்பது உண்மை என நடைமுறை வாழ்வு காட்டும்.

இக்குடும்பத்தில் குத்தல், உறுத்தல், குதர்க்கம், கோணம், வக்ரம், விதண்டாவாதம், பொறாமையில்லாவிட்டால், இந்நிலை மனத்தில் தொடர்ந்தால் இக்குடும்பம் சமூகத்தின் உச்சியை எட்டும். அதுவே யோகத்தைப் பொருத்தவரை மயிரிழை முயற்சியாகும்.

இது பூர்த்தியாகி பலிப்பது vital உயிரில் 6ஆம் கட்டத்திலிருந்து 7ஆம் கட்டம் வந்ததாக அர்த்தம். பிரம்மம் கடைசி கட்டம். அது தவத்திற்குரியது. தவத்திற்குரிய பிரம்மத்தை வாழ்வுக் கொண்டு வர மேற்சொன்ன ஆயிரம் நிலைகளைக் கடக்கவேண்டும். அதையும் கடந்து உடலையும் அடைந்து அதில் substanceஐ பிரம்மம் அடைய வேண்டும்.

* இயற்கையோடு இணைந்து வாழ்வது ஆரம்பத்தில் முதற் கட்டம்.

* பிரம்மம் உடலில் சித்திப்பது முடிவான ஆயிரம் கட்டங்களைக் கடப்பது.

பகவான் ஸ்ரீ அரவிந்தரை மனதில் வரித்து நம் உடல் அவருடலாக மாறுவதாக நினைப்பது, நினைத்து நினைவில் லயிப்பது உடலால் அவருடன் ஐக்கியமாவதாகும். உணர்வாலும், அறிவாலும், ஆன்மாவாலும், ஆன்மா மீண்டும் இறங்கி வந்து மனத்திலும், உயிரிலும், உடலிலும் வெளிப்படுவதிலும் இதே ஐக்கியத்தை நாட முடியும். பகவானுடன் ஐக்கியமாவதும், அன்னையுடன் ஐக்கியவமாவதும் ஒன்றே.

* *சமர்ப்பணம் ஐக்கியத்தில் முடியும்.*
* *ஆர்வம், நினைவு, பக்தியாகும்.*
* *மயிரிழை மனம் தெளிந்து அன்னையை ஏற்றால், மலையான உலகம் புரண்டு வந்து எதிரில் சேவைக்கு நிற்கும்.*

❋ ❋ ❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பக்தன் நிலையிலிருந்து இரண்டாம் கட்டம் போக,

— மேல் மனத்திற்கு நேர் எதிராகத் தானிருப்பதை ஏற்க வேண்டும்.

— பலன், பணம், பெண்ணுக்குச் சாதாரணமாக ஈர்க்கப்படக் கூடாது.

— மனம் மௌனமாக வேண்டும்.

— தன் மனத்தில் உண்மையில்லாதவற்றை அவன் ஏற்க வேண்டும்.

— சாதனையின் பேரில் சிறு ஆசைகளை நாடக் கூடாது.





## Volume I, P. 80

**இறங்கி வரும் சத்திய ஜீவியத்தால் எனக்கென்ன பலன் எனக் கேட்கும் உரிமை சாதகர்கட்கில்லை.**

**What right the sadhak has to benefit by the descending Supermind.**

நம்மிடையே அன்னை வாழ்ந்த காலத்தில் அவர்கள் ஏற்காத நம் பழக்கங்கள் பல.

1. ஒருவரைப் பற்றி மற்றவர்கள் பேசும் வம்புப் பேச்சு.
2. ஒருவருக்கு அன்னை ஒன்று செய்தால் அதையே அடுத்தவரும் எதிர்பார்ப்பது.
3. இதனால் எனக்கென்ன பலன் என்ற மனப்பான்மை.

**வம்புப் பேச்சு** *:* மனிதன் சாப்பாட்டுக்கும், உடைக்கும் வேலை செய்ய வேண்டிய அவசியமில்லாவிட்டால் இறைவனை எந்நேரமும் நினைக்க முடியும் என்று ஓரிடத்தை ஏற்படுத்த முனைந்து வெற்றி பெற்றேன். நான் கண்டது என்ன? பேச்சு, பேச்சு, பேச்சு என அன்னை மனம் வருந்தினார்கள்.

**எனக்கும் அதுவே வேண்டும்** *:* டாக்டரிடம் ஒரு நோயாளியை இருவர் அழைத்துப் போனால் நோயாளிக்கு ஊசி போடுகிறார் எனில் அடுத்த இருவரும் எங்களுக்கெல்லாம் ஊசி போடவில்லை எனக் குறைப்படுவதில்லை. பத்து பேர் ஆசிரமம் வந்தால், அவர்களில் ஆன்ம விழிப்புள்ள இருவரை அன்னை அழைத்து தரிசனம் தருகிறார். மற்ற 8 பேரும் எங்களைப் பார்க்கவில்லை எனக் குறைப்படுதல் அன்னைக்குத் தொந்தரவான மனப்பான்மை.

**எனக்கு என்ன பலன்** : பாண்டியில் ஆசிரமம் இருப்பதால் பாண்டிக்கு என்ன பயன் எனப் பலரும் அன்னையைக் கேட்டுள்ளனர். நாம் ஒரூரில் குடியேறினால் எவரும் நீங்கள் வருவதால் எங்களுக்கென்ன இலாபம் எனக் கேட்பதில்லை. அன்னை இந்தியாவுக்கு வந்தார், தமிழ்நாட்டில் குடியேறினார், புதுவையில் வசிக்கிறார் எனில் புதுவையும், தமிழ்நாடும் எப்படி அன்னைக்குச் சேவை செய்யலாம் என்று கேட்பது நம் பங்கு. நாம் அதைக் கேட்கவில்லை, ஆசிரமத்தால் எங்களுக்கு என்ன பலன் என்று கேட்பது முறையாகாது.

சத்திய ஜீவியம் உலகுக்கு வந்துள்ளது என்றால், அது என்ன? எப்படி வந்தது? அது புவியில் இறங்கியுள்ளதால் நம் கடமை என்ன? என்பவை உரிய கேள்விகள். மேற்சொன்ன கேள்வியை அன்னையிடம் சிலர் கேட்டுள்ளனர். அது சரியான மனப்பான்மை இல்லை.

ஸ்ரீ அரவிந்தர் 1910இல் புதுவை வந்தபொழுது நாட்டின் பல பாகங்களிலிருந்து அரசியல் தொண்டர்கள் அவரை நாடி வந்தனர். அவரைத் தரிசிக்க அனுமதியில்லை என்றபொழுது ஜன்னல் வழியாக ஏறி வந்து எட்டிப் பார்த்தனர். அவரது வேண்டுகோளை எவரும் பொருட்படுத்தவில்லை என்றபொழுது The Hindu பத்திரிகை மூலம் "நான் தனித்திருக்க விரும்புகிறேன். எவரையும் சந்திக்க விரும்பவில்லை. எவரும் என்னை சந்திக்கும் நோக்குடன் புதுவை வரவேண்டாம்" என ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதுபோல் அன்னை விடுத்த வேண்டுகோள்கள் பல, இதுவும் அவற்றுள் ஒன்று.

❋ ❋ ❋





## எது நியாயம்

(நவம்பர் இதழ் தொடர்ச்சி....)

*இல. சுந்தரி*

இன்று ஊர் திரும்பியாக வேண்டும். பார்சல் பில் கொடுக்கவும், சரக்கு எடுக்கவும் ஊர் போயாக வேண்டும். நம்பிக்கையின் பேரில் இவனைக் கம்பெனி அனுப்பியிருந்தது. சத்தியத்தைத் தரிசிக்காமல் போக மனமில்லாது போனான். முன்பின் கண்டிராத அந்த ஸ்ரீ அன்னையை வடிவமறியாது தரிசித்தான். ஓயாது அதே நினைவு.

ஊர் திரும்பிய கணவன் திடீரென உற்சாகமாய் இருப்பது கண்டாள். என்றுமே வாய்விட்டுக் கேட்டறியாதவள், அவனே முன்வந்து சொன்னாலல்லது இவள் கேட்கமாட்டாள்.

கண்ணம்மா திடீரென நான் உற்சாகமாகி விட்டேன் தெரியுமா? என்றான்.

"அப்படியா? கேட்க மகிழ்ச்சியாயிருக்கிறது" என்றாள்.

"காரணம் என்னவென்று நீ கேட்கவில்லையே?" என்றான்.

"சொல்லக் கூடியதானால் நீங்களே சொல்வீர்கள் என்றுதான் கேட்கவில்லை" என்றாள்.

சொல்லக் கூடியது மட்டுமில்லை கண்ணம்மா சொல்ல வேண்டியது. என் இன்ப துன்பங்களில் பங்கேற்க வந்தவள் நீ. ஆனால் இதுவரை இன்பங்கண்டறியாதவள். உன் கணவனால் நீ தினமும் துன்பத்தைத்தான் சந்தித்திருக்கிறாய்.

"ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்? துன்பப்பட்டது நீங்கள். என்னால் எதுவுமே செய்ய முடிந்ததில்லையே" என்றாள் அடக்கமாக.

“இல்லை கண்ணம்மா அப்படியில்லை. நீ இந்த வீட்டில் காலடி எடுத்த வைத்த நாளாய் எனக்குப் பெரிய ஆறுதல் கிடைத்தது. சிறு வயதிலிருந்தே அக்கிரமங்களைக் கண்டால் ஆத்திரப்படும் புத்தி எனக்கு. யாரேனும் ஆதரவு தேடி வந்தால் அவர் பொருட்டு எதையும் செய்வது என் குணம். அதனால் பலர் என்னை நாடி வருவதுண்டு. அதைப் பலன் கருதியோ, பெருமைக்காகவோ நான் செய்யவில்லை. என் இயல்பிலேயே நான் இப்படியிருந்தேன். தகப்பனில்லாத என்னைத் தன் அன்பு முழுதும் என் மீது வைத்த என் தாய்க்கு இந்த என் செயல் ஓயாத தொல்லையாக இருந்து வந்திருக்கிறது. அப்போதெல்லாம் என் அம்மா, ‘நீ பெரிய விக்ரமாதித்த மகாராஜா, உன்னிடம் நியாயம் கேட்டு வருவதும், நீ அவர்களுக்குப் பரிந்து பேசுவதும், பலமுள்ளவன் உன்னைப் பகைப்பதும் எனக்கு நிம்மதியே இல்லாமல் போய்விட்டது’ என்பாள். சத்தியம் என் பக்கமிருக்கும் போது என்னை அநியாயக்காரர்கள் ஏன் அடிக்கிறார்கள், பொய்யும், புரட்டும் பேசி அவர்கள் எப்படி ஜெயிக்கிறார்கள், என் மனதில் ஓயாது இதே சிந்தனைதான். நேர்மையை, நல்லதை எங்காவது பார்க்கமாட்டோமோ என்று மனம் ஏங்கியது. யாராவது கீழே கண்டெடுத்த பொருளை இது யாருடையது என்று விசாரித்துக் கொடுத்துவிட்டாலும் எனக்குரிமையில்லாதது வேண்டாம் என அடுத்தவர் பொருள் மீது ஆசைப்படாதிருந்தாலும் எனக்குப் பூரிப்பாயிருக்கிறது. நேற்று கம்பெனிக்குச் சரக்கு வாங்க பாண்டியில் பிரபல நிறுவனம் ஒன்றிற்குச் சென்றிருந்தேன். அங்கு நான் அறிந்த செய்திகள் எனக்கு மிகவும் இனிப்பாய் இருந்தது. அங்கு வேலை நிறுத்தம், கூலியில் ஏமாற்றம் எதுவும் கிடையாதாம்’’.

‘‘அப்படியா? கேட்கவே மகிழ்ச்சியாயிருக்கிறதே. நிர்வாகி மிகவும் நல்லவர் போலும். தொழிலாளர்களை அனுசரித்துப் போகின்றவர் போலும்’’ என்றாள்.



‘‘நிர்வாகி நல்லவர்தாம். ஆனால் அனுசரித்துப் போவது நிர்வாகியல்லர். தொழிலாளிகள்தாம்’’ என்றான்.

‘‘என்ன விந்தையான செய்தியிது?’’ என்றாள்.

அந்தத் தொழிற்சாலையை ஸ்ரீ அன்னை என்ற ஒருவர் நடத்துகிறாராம். அங்கு இறைவனுக்குச் செய்யும் சேவை என்று எண்ணி வருபவர்க்குத்தான் வேலையாம். எனவே, வேலை அதிகம், கூலி குறைவு என்ற பேச்சிற்கே இடமில்லை. அதில் வேலை செய்வது பாக்கியம் என்று நினைக்கிறார்களாம். எனவே சோர்வும் சுயநலமும் இருப்பதில்லையாம். அதனால் உற்பத்தியும் மிகுதியாம். தரமும் நிரந்தரமாம். உழைப்பவர்களை மகிழ்விக்க வேண்டும் என அவர்கள் தேவைகள் நன்கு கவனிக்கப்படுகிறதாம். அதைக் கேட்டது முதல் அந்த ஸ்ரீ அன்னையைத் தரிசிக்க ஏனோ மனம் ஆர்வமுறுகிறது’’ என்றான்.

“கேட்கவே ஆரோக்கியமாயிருக்கிறது” என்றாள். சத்யம்தான் இவன் தாரக மந்திரம் அது ஒருருக்கொண்டு வந்திருப்பதைத் தரிசிக்க வேண்டாமா? அதே சிந்தனை.

கம்பெனிக்குப் புறப்பட்டான். போகும் வழியினில் ஓர் அழகான கார். திடீரென நின்றது. டிரைவர் இறங்கி ஏதோ சோதனை செய்தார்.

ஏதேனும் இடையூறாக இருக்குமோ? உதவி தேவைப்படுமோ என்று தன் இயல்பான உந்துதல் காரணமாய் அருகில் சென்ற குமரன், ‘‘வண்டியில் ஏதேனும் தொந்தரவா?’’ என்று அக்கறையுடன் விசாரித்தான். டிரைவர் மிகவும் கலவரமடைந்தவர்போல் காணப்பட்டார். ‘‘ஆமாங்க. வண்டி ரொம்பப் புதுசு, ரிப்பேருக்கு அவசியமில்லை. நல்ல செக்அப் பண்ணிதான் எடுத்தேன். அம்மாவுக்கு ஒழுங்கீனம் பிடிக்காது’’ என்றார் அச்சத்துடன்.

கவலைப்படாதீங்க, உங்களுக்குத் தடையில்லையென்றால் நான் வண்டியைப் பார்க்கட்டுமா என்றான் உதவி செய்யும் நோக்கத்துடன். டிரைவர் வண்டிக்குள்ளே பின் சீட்டில் எஜமானியம்மாள்போலும் ராஜ கம்பீரமாய் வீற்றிருந்தவரைப் பணிவுடன் பார்த்தார். அவர் இவனைப் பார்த்து புன்னகையுடன் தலையசைத்தார். அந்தச் சிரிப்பு, அதன் வசீகரம், அதன் கம்பீரம், இதற்கு முன் அதுபோல் எங்கும் பார்த்திராதது. உடம்பெல்லாம் சிலிர்த்தது. அந்தக் கண்களில் அப்படியொரு காந்த சக்தி. அதை உள்ளுணர்வோடு ஒரு முறை சந்தித்துவிட்டால் வாழ்வின் இலக்கு எட்டப்பட்டுவிடும் போலும். கோபத்தை எதிர்பார்த்த டிரைவர் சிரிப்பைக் கண்டு வியந்தான். தெய்வீகத்தில் கோபம் எது, குணம் எது, யாவுமே கடந்ததன்றோ அது. நம் உள்ளுணர்வின் பிரதிபலிப்பன்றோ நாம் காண்பது. முன்புற பானெட்டைத் திறந்து உள்ளே சரியாக ஒரு முறை பார்த்தான். பழுதேயில்லை. வலம் வருவதுபோல் வண்டியை ஒரு முறை சுற்றி வந்து முன்புறத்து சக்கரத்தில் டயரில் பாதிப்பை, நுட்பமாக இருந்ததைக் கண்டுபிடித்தான். டிரைவர் தான் சற்று முன் சோதித்தபோது இது ஏன் என் கண்ணிலே படவில்லை என்று விழித்தான்.

இறுதியில் டிக்கியிலிருந்த ஸ்டெப்னியை இருவரும் உரிய கருவிகளின் துணையுடன் பொருத்த கார் புறப்படத் தயாரானது. குமரனுக்குப் பெருத்த மகிழ்ச்சி. டிரைவருக்குப் பெரு வியப்பு. உள்ளேயிருந்தவர் மனங்கடந்தவர். இரண்டு பக்கமும் அறிந்தவர். வியப்பையும் மகிழ்வையும் உற்பத்திச் செய்தவர். டிரைவர் குமரனுக்கு நன்றி சொன்னார். இதற்கெல்லாம் நன்றி எதற்கு என்றான் குமரன். மீண்டும் உள்ளே நோக்கினான். உள்ளே கம்பீரமாய் வீற்றிருந்த மகாராணி போன்றவர் இவனைப் பார்த்து அழகுறச் சிரிக்கிறார். அது நன்றி கூறும் சிரிப்பன்று. கர்வமான சிரிப்பன்று, குழந்தைகள் சிரிக்குமே கள்ளமில்லாத ஒரு சிரிப்பு



அந்தவகைச் சிரிப்பு. மென்மையாக முதுகில் தடவிக் கொடுப்பதுபோல ஒரு சிரிப்பு. மீண்டும் சிலிர்த்தது. பார்த்துக் கொண்டேயிருக்கலாம்போல் ஒரு தவிப்பு. எல்லாம் சில கணப்போதுகள்தாம். கார் நகர்ந்தது. யார் என்னவென்று கூடக் கேட்கத் தோன்றவில்லை. தனக்காகவே இளமை முதல் வாழும் தன் தாயிடத்தும், தன்னை ஆளாக்கிக் கொண்டிருக்கும் கண்ணம்மாவிடம், மழலையால் மகிழ்விக்கும் தன் பிள்ளைகள் இடத்தும் இதுவரை அப்படியொரு ஈர்ப்பு ஏற்பட்டதில்லை. அவர் யார்? ஏன் அப்படிச் சிரித்தார். அவரோடு எனக்கு என்ன தொடர்பு? என்றெண்ணியவண்ணம் சென்றான்.

கம்பெனியின் சூழல் மிக மகிழ்ச்சிகரமாயிருந்தது. செய்யும் பணிகளெல்லாம் சிறந்தன. மனம் நிறைந்திருந்தது. ஒரு சண்டை சச்சரவில்லை. அந்த மகிழ்வுடன் வீடு திரும்பினான்.

கண்ணம்மா! இன்று எனக்கு ஓர் இனிய அனுபவம் ஏற்பட்டது. அதை உன்னிடம் கூற வேண்டுமென்று ஆவலோடிருக்கிறேன். காபியெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம் வா வா என்றான்.

காலையில் கம்பெனிக்குப் போகும் வழியில் ஒரு புத்தம்புது கார் திடீரென நின்றுவிட்டது. அதில் கோளாறு வரவே வாய்ப்பில்லை. டிரைவர் மிகவும் அச்சப்பட்டார். நான் உதவிக்குப் போனேன். என்னை அனுமதிக்க உள்ளேயிருந்த அவர் எஜமானியம்மாளிடம் உத்தரவு கேட்டார். அவர் என்னைப் பார்த்துப் புன்னகைத்துத் தலையசைத்தார். அந்தக் கணம் நான் கற்பூரமாகி காற்றில் கரைவதுபோல் மிக மகிழ்ச்சியாயிருந்தது. அந்தச் சிரிப்பிற்குரியவர் யாரெனத் தெரியவில்லை. ஆனால் அந்த மகிழ்ச்சி இப்போது மட்டுமன்று எப்போதுமே என்னை விட்டகலாது என்றான்.

அப்படியொரு மகிழ்ச்சியைத் தர சக்தி தேவியால்தான் முடியும்.

அது அம்பாளின் அவதாரமோ என்னமோ? என்றாள் கண்ணம்மா.

அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஏதோவொரு பெரிய சக்தி அவரிடம் இருப்பதை மட்டும் என்னால் உணர முடிகிறது. ஆனால் அந்தப் புதுக் கார் எப்படி ரிப்பேராக முடியும்? என்றான்.

உங்களுக்குக் காட்சிக் கொடுக்க எண்ணி கடவுள் அப்படிச் செய்தாரோ என்னவோ? என்று விளையாட்டாகச் சொல்வதுபோல் கண்ணம்மா சொன்னாலும் அதிலும் உண்மையிருக்குமோ என்றது மனம். அன்று முதல் உள்ளத்தில் எப்போதும் மகிழ்ச்சிப் பிரவாகம்.

வெளியில் எது நடந்தாலும் பாதிப்பில்லை. அந்தச் சிரிப்பு, கம்பீரம், கண்களில் கண்ட வசீகரம், அதுவே அவன் மனக் காட்சியாயிருந்தது.

ஏப்ரல் 24ஆந்தேதியும் வந்தது. முதல் நாளே மனைவி, குழந்தைகள், அம்மாவுடன் பாண்டியில் வந்து தங்கினான்.

மறுநாள் தரிசனத்திற்கு வரிசையில் நின்றனர். பக்தர் கூட்டம் வரிசையாக முன்னேறி ஸ்ரீ அன்னையிடம் ஆசியும், பிரசாதமும் பெற்று மலர்ச்சியும், மகிழ்ச்சியுமாய்ச் சென்றது. வரிசையில் தன் வாய்ப்பு வரும்வரை பொறுமையாக அமைதியாக அதே நேரம் மிகுந்த ஆர்வத்துடன் இருந்தான் குமரன்.

வரிசை நகர நகர தன் வாய்ப்பு வருமுன் சற்று அருகில் அங்கு வீற்றிருந்தவரைப் பார்த்தவுடன் இனந்தெரியாத இன்பப் பரவசம். உடம்பெல்லாம் சிலிர்த்து கண் நீர் தளும்பியது. ஆகா, இவர் வேறு யாருமல்லர். அன்று புதிய காரொன்றில் வந்து டயர் மாற்றச் செய்த அதே மகாராணியார். இந்த வடிவத்தை எண்ணி அவன் இன்புற்றது எவ்வளவு பொருத்தம். அருகே நெருங்கியதும் சொல்லொணாப் பரவசம். மீண்டும் அந்தச் சிரிப்பு. அதே கனிவான பார்வை. நான் உம்மிடம் வந்தேனா? நீர் என்னைத் தடுத்தாட் கொண்டீரா? என்றெண்ணியவண்ணம் அவர் ஆசியும், மலர்ப்



பிரசாதமும் பெற்றான். அந்தச் சிரிப்பு, இத்தனை நாள் நீ தேடியது என்னைத் தானா? அகப்பட்டேனா? என்பது போலிருந்தது. ‘‘நீங்கள்தான், உங்களைத்தான்’’ என்றது உள்ளம். உடல் நகர்ந்தது. உணர்வு அவரைப் பற்றிக் கொண்டது.

தரிசனம் முடித்து எல்லோரும் ஒரு மரத்தடியில் அமர்ந்து அந்த நினைவை அனுபவித்தனர். அம்மா உனக்கு என்ன தோன்றுகிறது? என்றான் குமரன்.

‘‘நீ இப்படியெல்லாம் இருப்பதே எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது’’ என்றாள்.

‘‘கண்ணம்மா தரிசனம் எப்படியிருந்தது?’’ என்றான்.

‘‘மனம் மிகவும் நிறைவாக இருக்கிறது’’ என்றாள்.

அப்பா! என்று பிள்ளைகள் இருவரும் ஒரே மகிழ்ச்சியுடன் அழைத்தனர். அப்பா அவங்க என் தலையில் கைவைத்து ஆசி கூறியது ரொம்பச் சந்தோஷமாக இருக்கிறது அப்பா என்றான் ஒருவன். அப்பா பிளெசிங் பாக்கெட் கொடுக்கும்போது என்னைப் பார்த்துச் சிரித்தார்கள் அப்பா எனக்கும் ஒரே சந்தோஷமாய் இருக்கிறதப்பா என்று மற்றவன் கூறினான். உண்மையில் அந்தச் சிரிப்புதான் இவன் உள்ளுக்குள் உறங்கிய எதையோ விழித்தெழச் செய்ததாக இவன் உணர்ந்தான். அந்தச் சிரிப்புக்கு ஈடு எடுப்பு உண்டா? இல்லை. ‘‘இப்போ நாம பார்த்தோமா ஒத்தங்கள அவுங்க யாருப்பா?’’ என்றனர் பிள்ளைகள்.

‘‘அவுங்கதாம் சத்யம் என்ற கடவுள்’’ என்றான்.

‘‘அப்படி ஒரு கடவுள் இருக்காப்பா?’’ என்றனர்.

‘‘அப்படி ஒரே ஒரு கடவுள்தான் உலகத்துல இருக்கு’’ என்றான்.

‘‘இன்னும் எவ்வளவோ கடவுள்ளாம் இருக்காங்களே அவுங்கள்ளாம்?’’

''எல்லாக் கடவுள்களும் இந்தக் கடவுளுக்குள்தான் இருக்கிறார்கள்'' என்றான் குமரன்.

''எனக்கென்னவோ இப்படியே உட்கார்ந்து அந்தத் தரிசனத்தை நினைத்துக் கொண்டேயிருக்கலாம் போலிருக்கு கண்ணம்மா'' என்றான்.

"ஒரே இடத்தில் இருக்கவே பிடிக்காதும்பீங்களே இப்படி நினைக்கிறதே பெரிய மாற்றம்தான்'' என்றாள்.

உண்பது, உறங்குவது, உழைப்பது தவிர வேறு பரவச உணர்வுகள் அவனுக்கு அனுபவமில்லை. இவனுக்காக இவன் அம்மா அடிக்கடி கோயிலுக்கு நேர்ந்து கொள்வாள். இவன் கோயில், குளம் எங்கும் போவதில்லை. ஏதாவது பூஜை, விரதம் என்றால் கடவுள் கொடுத்த உடம்பால் உழைத்து உண்பதே விரதம்தான், கடவுள் படைத்த உயிரினங்களை நேசிப்பதே பூஜைதான் என்பான். ஆனால் அவன் ஒரு கடவுளைக் கண்ணால் காண்கிறான். மேலும் மேலும் காண விரும்புகிறான். அந்தத் தெய்வத்தின் கோட்பாடுகளை விரும்பினான். அவர்களைப் பற்றிய நூல்களையெல்லாம் வாங்கி வந்து இரவெல்லாம் விழித்துப் படித்தான். ஏதோ தான் தன் இலக்கை நெருங்கிவிட்டதுபோல் உணர்கிறான். அந்தத் தெய்வத்தின் சான்னியத்தில் தானிருக்க என்ன செய்யவேண்டும் என்று எண்ணிய வண்ணம் வேலைக்குப் போனான்.

எதைத் தொட்டாலும் அந்த முகம், அந்தச் சிரிப்பே நினைவில் வந்தது. திடீர் திடீரென தன்னையும், வேலையையும் மறந்து நிற்கும் இவனை அனைவரும் வியப்புடன் பார்த்தனர்.

திடீரென மறுநாள் லீடு எடுத்துக்கொண்டு பாண்டி சென்றான். வழியில் லெவல் கிராசிங்கில் பஸ் நின்றது. எல்லோரும் இறங்கி நின்று வேடிக்கை பார்த்தனர். எப்படியும் 15 நிமிடங்கள் ஆகுமென்றனர். இறங்கியவன் கேட்டுக்கு அந்தப்



பக்கத்தில் அன்று பார்த்த அதே கார் நின்றது. அன்று தரிசித்த அவர் இருப்பாரோ என்று ஆவல் மிக விறுவிறென கேட்டைச் சுற்றி அப்பால் சென்றுவிட்டான். அதே கார்தான். பின் சீட்டில் அதே மகாராணியார் போன்ற கம்பீரத்துடன் வீற்றிருப்பதும் அவர்தாம். அவர் பார்வையில் படுமாறு காரின் பக்கத்தில் சற்று தள்ளி நின்று மௌனமாய்க் கைகூப்பினான். அதே தலையசைவுடன் புன்னகைத்தார். அந்தக் கண்களில் ஏதோவொரு வசீகரம் இருந்தது. இன்னது செய்வது என புரியாது மகிழ்ந்திருந்த வேளையில் கேட் திறந்தது. வண்டிகள் இங்கும், அங்கும் விரைந்து இடம் மாறின. அந்தக் கார் கண்ணில் மறையும்வரை இவன் அதையே நோக்கியவண்ணம் நின்றான். ஓரளவு ஓடியதுபோல் தோன்றி பிறகு பறப்பதுபோல் மறைந்துவிட்டது. திரும்பி பஸ்ஸில் இறங்கிய இடத்திற்கு வந்தான். இவன் வந்த பஸ் சென்றுவிட்டிருந்தது. அங்கு மரத்தடியில் ஒரு பெட்டிக்கடையில் ஒரு முதியவர் இவன் செயலைக் கவனித்துக் கொண்டிருந்தவர், ஏனுங்க நீங்க ஏறி வந்த பஸ் அப்போதே போய்விட்டது. யாரையாச்சும் தேடிட்டுப் போனீங்களா? பஸ்ஸில் ஏதேனும் சாமானை விட்டுட்டீங்களா? என்றார்.

பஸ்ஸில் எதையும் விடவில்லை. அந்தப் பக்கம் மிகவும் வேண்டியவர் ஒருவர் கார் போலிருந்தது. அதுதான் பார்க்கப் போனேன் என்றான்.

முக்கியமா வந்த வேலையை விட்டுட்டு பாதியிலே பாத்தவங்களைத் தேடிப் போயிட்டீங்களே என்றார்.

வந்ததே அவங்களைத் தேடித்தான் என்றால் இவர்க்குப் புரியுமா? சிரித்துக் கொண்டான்.

என்ன கண்ணம்மா அப்படிப் பார்க்கிறாய்? இன்று கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது என்பதுபோல் நான் தேடிப் போன தெய்வம் எதிரே வந்து காட்சி தந்துவிட்டது என்றான் மகிழ்ச்சி பொங்க.

சாமி பூதமெல்லாம் நம்பிக்கையில்லை என்றவன் கணத்திற்குக் கணம் கடவுட்காட்சிக்கு ஏங்குவது வியப்பாக இருந்தது. ஆனாலும் பழைய அமைதியின்மை மாறி புதிய உற்சாகமும் தெய்வீகமும் மனநிறைவைத் தந்தது.

மகனின் மகிழ்ச்சியைக் கண்ட நிறைவிலேயே வள்ளியம்மை பிறவிப்பிணி நீங்கிவிட்டாள். இறைவன் அவளை பொறுப்பினின்றும் கண்ணம்மா வந்தவுடனேயே மீட்டுவிட்டான். தாயின் பிரிவு குமரனை எவ்வித சோகத்திலும் ஆழ்த்தவில்லை. அதையும் இயல்பாகவே ஏற்றுக் கொண்டான். குழந்தைகள்தாம் பாட்டியின் பரிவிற்கு ஏங்கின. வளர வளர அன்னையின் சூழலால் அவர்களும் அப்பிரிவை ஏற்றனர்.

ஆனால் குமரனுக்கு அடிக்கடி ஆஸ்ரமம் செல்லவும் அந்தத் தெய்வத்தைத் தரிசிக்கவும் ஏற்பட்ட ஆவல் அவன் வேலைக்குத் தடையானது. அடிக்கடி சம்பளக் குறைவு ஏற்பட்டு வேலையே போய்விட்டது. அப்போதும் குமரனின் மனம் அன்னையின் தரிசனத்திற்குத்தான் ஏங்கியதே தவிர இழந்ததற்கு ஏங்கவில்லை. அவன் மனதிற்குள் அவன் அன்னை இன்பத்தில் திளைக்கத் தொடங்கிவிட்டான். புற வாழ்வு ருசிக்கவில்லை.

கண்ணம்மா! உலகில் பணம் போனால் பலம் போகும் என்பார்கள். எனக்கு வேலையும் பணமும் போய்விட்டது. ஆனால் உள்ளத்தில் புதுத் தெம்பும், ஆழ்ந்த இன்பமும் ஏற்படுகிறது. ஏனென்று தெரியவில்லை என்றான்.

''வேண்டாதது போய் வேண்டியது வருகிறது போலும்'' என்றாள்.

வேலையும் கூலியும் இல்லாதவனை உலகம் மனிதனாகவே மதிப்பதில்லை. குடும்பம் குழந்தை என்றிருப்பவருக்கு இவை மேலும் அவசியமல்லவா? இல்லானை இல்லாளும் வேண்டாள் என்பர். கண்ணம்மாவின் நிலை என்ன?



ஆசிரமம் செல்வதோடில்லாமல் அங்கு நிலையாக ஏதேனும் தொண்டு புரியக் கூடுமா என்று எண்ணத் தொடங்கினான். இப்பூச் செடிகளுக்கு நீருற்றி இவை அன்னையின் பொருட்டுத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளமைக்கு நன்றி செலுத்த முடியுமா என்று சிந்தித்தவண்ணம் நின்றிருந்தான்.

ஒரு சாதகர் இவனை அணுகி, ''இங்கு தொண்டு செய்ய ஆவல் உண்டா?'' என்று கேட்டார்.

அந்த ஆர்வத்தில்தான் தினமும் இங்கு வருவதாக இவன் கூறினான்.

''நீங்கள் என்ன படித்திருக்கிறீர்கள்? என்ன வேலை தெரியும்?'' என்றார்.

''பட்டப்படிப்பு படித்திருக்கிறேன். பிரபல கம்பெனி ஒன்றில் பணிபுரிந்திருக்கிறேன். எந்திரங்களை பழுது பார்க்கும் திறமையும் அனுபவத்தால் உண்டு'' என்றான்.

"இங்கு சாப்பாட்டுக் கூடத்தில் உணவுத் தட்டு சுத்தம் செய்யும் (எச்சில் தட்டு கழுவும்) பணிதான் உள்ளது. உமக்குச் சம்மதமா?" என்றார்.

"கழிப்பறை சுத்தம் செய்யும் பணியானாலும் தயங்கமாட்டேன்" என்றான்.

அந்தச் சாதகருக்குத் தம்மைத் தலையில் யாரோ ஓங்கி அடித்தது போலிருந்தது. இவர் ஏதோ அவனைச் சோதனை செய்வதாக எண்ணி கேட்கவும் அவன் அப்படிப் பதில் சொல்லவும், இங்கேயே இருங்கள் என்று கூறி உள்ளே சென்றார்.

என்ன வந்திருப்பது பக்தன்தானா? என்றார் அன்னை வழக்கமான குறும்புச் சிரிப்புடன்.

என்னை மிகவும் மன்னித்தருள வேண்டும். என் இயல்பான சுபாவத்தினால் அப்படிப் பேசிவிட்டேன் என்றார் சாதகர்.

சுபாவங்களை மாற்றத்தானே நான் வந்திருக்கிறேன் என்றார் அன்னை. என்ன பேசினார் என்று நாம் அறியவேண்டும் அல்லவா. சற்றுமுன் அங்கு நடந்த உரையாடலைக் கவனியுங்கள்.

.....

தம்முடைய அறையில் தமக்குள் ஆழ்ந்திருந்த அன்னை திடீரென விழித்து ஒரு சாதகரை அழைத்து, வெளியில் புதிதாக வந்திருக்கும் (சில புறஅடையாங்களை கூறி) பக்தனை இங்கு அழைத்து வா என்றார்.

“அவர் பக்தர் என்பதற்கு என்ன அடையாளம்?” என்று கேட்டுவிட்டார் சாதகர்.

உன்னால் இயன்ற சோதனையைச் செய்து கண்டுபிடித்து அழைத்து வாயேன் என்றார். அன்னை பக்தர் என்ற சொல்லை பயன்படுத்திய உடனேயே அவர் பக்தர் என்று உணராது என்ன அடையாளம் என்ற கேட்ட தன் அறியாமைக்கு நாணினார். இதுதான் நடந்தது.

குமரன் அன்னையின் நேரடிப் பார்வைக்குக் கொண்டு வரப்பட்டான்.

ஆகா! இது கனவா? நனவா? என் ஆவல் நிறைவேறிவிட்டது. இந்தச் சான்னித்யம் எனக்கு நிலைக்க வேண்டும் என்று மனமார எண்ணினான்.

உன் வேலையும் வருமானமும் போய்விட்டதே. எப்படிக் குடும்பத்தைக் காப்பாற்றுவாய்? என்றார் அன்னை.

என்னை ஆதரிப்பவரே என் குடும்பத்தையும் காப்பாற்றுவார் என்று நம்புகிறேன் என்றான் நெகிழ்ந்து.

*தொடரும்....*

❋ ❋ ❋





## P. 26. Deceived no more by form he saw the soul.

### ரூபத்தைக் கடந்து ஆத்மாவைக் கண்டான்.

சிருஷ்டி என்பதை நாம் அறிவோம். ஸ்ரீ அரவிந்தர் சிருஷ்டியில் முதல் பகுதியைச் சிருஷ்டி எனவும், இரண்டாம் பகுதியைப் பரிணாமம் எனவும் கூறுகிறார். சிருஷ்டியின் சாரமாக அவர் கூறுவது,

* **பிரம்மம் சத் எனும் புருஷனாயிற்று. புருஷன் ஜீவன்.**
* **ஜீவனுக்கு ஜீவியம் உண்டு.**
* **சக்தி ஜீவியத்திலிருந்து வெளிப்படுகிறது.**
* **சக்தி ரூபம், குணம் பெறுகின்றது.**
* **ரூபமும், குணமும் தோற்றம்.**
* **அதைக் கடந்த நிலையில் ஜீவியமும், அது வெளிப்படுத்திய சக்தியும் உண்டு.**
* **ஜீவியத்தைக் கடந்த ஜீவன் ஆத்மா.**

பொருள்களின் ரூபத்தைக் காணும் நாம் ரூபமே பொருளெனக் கொள்கிறோம். ஆத்மாவே அடிப்படை. ரூபத்தினடியில் மறைந்துள்ள ஆத்மாவைக் காண திருஷ்டி வேண்டும்.

இப்பக்கத்திலுள்ள இதர கருத்துகள் :

— **விவேகம் அவனை உயர்த்தி ஆத்மாவின் சிற்பியாக்கியது.**

— **வையகத்தின் இரகஸ்ய அரண்மனையைக் கட்டியவன்.**

— **காலத்தைக் கடக்க விழையும் காலத்தின் துளி.**

— சுதந்திரமும், சாம்ராஜ்யமும் மேலிருந்து அழைக்கின்றன.

— ஆத்மாவின் விடியல் நிலத்தில் தெளிகின்றது.

— ஜீவன் வளரும்பொழுது மனிதகுலத்தின் கட்டவிழ்கிறது.

— பெரிய ஆத்மா பெரிய லோகத்தைக் காண்கிறது.

— அறிவு வகுத்த அரண்களை ஞானம் அழிக்கிறது.

— மனம் உயர்ந்து ஆத்மா பிரம்மத்துள் புதைகிறது.

— முதல் அடி பூமியைக் கடந்து பரவெளியாக்குகிறது.

— மூடிய இரகஸ்யக்குகையை அடைந்து நின்றான்.

— எளிய செயலை அற்புதச் செயலாக்கினான்.

— தெய்வீகக் காரியத்தைச் சாதாரணச் செயலாக்கினான்.

— இயற்கைக்கு எட்டாத இலட்சியங்கள்.

— ஜீவனுள் பொதிந்த இரகஸ்யம் தெரிந்தது.

— மனத்தின் எண்ணத்தையும், இதயத்தின் உணர்ச்சியையும் பெற்றது.

❋ ❋ ❋


**<u>அறிவிப்பு</u>**

டிசம்பர் 2001இல் சந்தா முடிவடையும் சந்தாதாரர்கள் உடனடியாக சந்தாவினை புதுப்பிக்க வேண்டுகிறோம்.




## பிரார்த்தனை பலிக்க வேண்டும்

அண்ணன் - உலகில் புதிய வசதிகள் வருகின்றன. பலர் பயன்படுத்திப் பலன் பெறுகின்றனர். சிலர் முன்வருவதில்லை. சில விஷயங்களைப் பலரும் புறக்கணிக்கிறார்கள். சில விஷயங்களை - T.V. போன்றவற்றை - எவரும் புறக்கணிப்பதில்லை. இவற்றையெல்லாம் கடந்த நிலையில் அன்னை ஆன்மீக வசதியைக் கொண்டு வந்துள்ளார். அது இவற்றையெல்லாம் உட்கொண்டது. கடந்தது மாறும். அனைவருக்கும் உரியது அது. அதைப் பெற வேண்டும், அனைவரும் பெறவேண்டும் என்பது பல்வேறு வழியாகக் கூறுகிறேன்.

தம்பி - உலகத்தில் வந்துள்ள புதிய வசதிகள் கண்ணுக்குத் தெரிகின்றன. அன்னை அளிப்பது புரியவில்லை. பழைய காலத்து மனிதனுக்கு இக்காலத்து வசதி போன்றது இக்காலத்து மனிதனுக்கு அன்னை அளிப்பது.

அண்ணன் - கால்நடையாகப் போனவன் காரில் போவதுபோன்ற மாற்றம் இன்று அன்னை காரில் போகும் மனிதனுக்கு அளிப்பது. பக்தர்கட்கே புரியவில்லை என்றால் மற்றவர்கட்கு எப்படிப் புரியும்? நாம் பேசுவது மனம், வாழ்வைப் பொருத்தது என்பதால் 1 to 9 என்ற அளவீட்டில் 3 to 6 எடுத்துக்கொண்டு பார்ப்போம்.

| | 1 | 2 | 3 |
|---|---|---|---|
| **மனம்** | தத்துவ ஞானி | கவிஞர் | திறம்பட வாழ்பவர் |

| | 4 | 5 | 6 |
|---|---|---|---|
| **உணர்வு** | மனிதர்களைப் புரிந்து கொள்பவர் | தலைவன் | தொண்டன் |
| | 7 | 8 | 9 |
| **உடல்** | கைவேலை செய்பவன் | கூலிவேலை செய்பவன் | ஜடம் |

பொதுவாகச் சொன்னால் மனிதரை 9 கட்டங்களில் கணிக்கலாம். அவர்களை மேற்கண்டவாறு இங்கு குறிப்பிட்டுள்ளேன். நாம் வாழ்வை மட்டும் கருதுவதால் 3 முதல் 6 வரை உள்ள நிலைகளையே முக்கியமாகக் கருத வேண்டும். அவை 4 கட்டங்கள். ஒவ்வொன்றையும் இரு பகுதிகளாகக் கருதினால் 8 கட்டங்களாகும். அன்னையை அழைக்கும்போது இந்த எட்டு கட்டங்களை வரிசையாகக் கருதினால் அழைப்பின் ஆழம் அதிகமானால் பலன் அதிகரிக்கும். எந்தக் கட்டத்தில் நம் பிரார்த்தனை பலிக்கிறதோ அதற்கு உட்பட்ட எல்லாப் பிரார்த்தனைகளும் நமக்குப் பலிக்கும் தகுதியுண்டு என்று நாம் அறியலாம். 9ஆம் கட்டம் உடல், ஜடம் என்றேன். டாக்டர் கைவிட்ட பிரார்த்தனை பலித்தால் நம் பிரார்த்தனை 9ஆம் கட்டத்தில் பலிக்கிறது. உலகில் ஒரு மருந்தில்லை என்ற வியாதி பிரார்த்தனையால் தீருகிறது எனப் பொருள். 9ஆம் கட்டத்தை மேற்பகுதி, கீழ்ப்பகுதி எனப் பிரித்தால் ஜாதகம் கைவிட்ட நிலை கீழ்ப் பகுதியாகும். அப்படி ஒரு பிரார்த்தனை பலித்தால் அவருக்குப் பலிக்காத பிரார்த்தனையேயில்லை என்று புரிந்து கொள்ளலாம். ஏனென்றால் 9ஆம் கட்டம் ஜாதகம் என்பதைக் கடந்த நிலை உலகில் இல்லை. அதேபோல் 3, 4, 5, 6



நிலைகளை மேற்பகுதி (consciousness), கீழ்ப்பகுதி (substance) எனப் பிரித்து அவற்றிற்குரிய பிரார்த்தனைகளைக் கருதுவோம்.

**3 மேற்பகுதி** - 3 என்பது மனம். செயலைத் திறனாகச் செய்யும் மனம். முடிவு எடுப்பது. நாம் ஒருவரிடம் போய் அவருடைய முடிவை மாற்றிச் செயல்படச் சொல்வது எளிதன்று. அதுவும் மேலதிகாரி, நமக்குப் பெரியவர், பணம் உள்ளவர், ஊரில் முக்கியஸ்தர், பதவியிலுள்ளவர் முடிவு, முடிவானதே. அது பிரார்த்தனைக்கு மாறுகிறது எனில் நம் வாழ்வில் எவர் முடிவும் நமக்கு நிகரில்லை. நம் முடிவே, முடிவு. அதாவது அன்னை சட்டப்படி நாம் எடுக்கும் முடிவுக்கு நம் வாழ்வில் எதிர் இல்லை எனப் பொருள்.

**3 கீழ்ப்பகுதி** - மேற் பகுதியை decision என்றால் கீழ்ப்பகுதியை determination எனலாம். ஆழ்ந்த முடிவு எனலாம். 3 வருஷத்திற்கு முன் டிரான்ஸ்பர் கொடுக்கக் கூடாது என்ற உத்தரவை மாற்றி நமக்கு முதல் வருஷம் டிரான்ஸ்பர் போடுவது இம்முடிவு பிரார்த்தனையாக மாறுவது. மேற்பகுதியை விட கீழ்ப்பகுதி வலுவானது.

**4 மேற்பகுதி** - 4 என்பது vital mind உணர்வுக்குரிய மனம். பொதுவாக வக்கிரமாக இருக்கும். பிறரை எளிதில் அறியும் திறனுடையது. உதாரணமாக ஒருவர் எவரையுமே பாராட்டாதவர், நம்மை சதா மட்டம் தட்டிப் பேசுபவர் எனில் அவர் வாயால் நம்மைப் பாராட்ட வேண்டிய சந்தர்ப்பம் வந்தால் அருள் வக்கிரத்தை மாற்றிவிட்டது எனப் பொருள்.

**4 கீழ்ப்பகுதி** - இதுவும் vital mind. ஆனால் வலிமையுள்ளது. அடாவடியாகவே பணம் சம்பாதிப்பவனுடைய நிலையிது. விவரம் தெரியாமல் அவனிடம் நாம் பணம் கொடுத்துவிட்டால் ஊரில் அனைவரும் இனி அது வாராது என்பார்கள். அவர்கள் கூறுவது உண்மை. அது பிரார்த்தனையால் வந்தால் அடாவடிக்காரனும் அருளுக்குக் கட்டுப்படுகிறான் எனப் பொருள்.

**5 மேற்பகுதி** - இதுவும் vital. ஆனால் உணர்வு மையம். இங்குள்ளவர் எவருக்கும் தாமே கட்டுப்படமாட்டார்கள். தெளிவாக இருப்பார்கள். அவர்கட்குச் சுதந்திரம் உள்ள இடத்தில், நியாயம், நல்லது, பரிதாபத்திற்கு இணங்கமாட்டார்கள். நீ கெட்டுப் போக ஒருவர் வேலை செய்தால், கெட்டுப் போன பின் கைதட்டிச் சிரிக்கலாம் என இருந்தால், பிரார்த்தனையால் அவரே உனக்கு உதவ முற்பட்டால், அது பெரிய விஷயம்.

**5 கீழ்ப்பகுதி** - மேற்பட்டவர்கள் தீர்மானமாக இருக்கக் கூடிய இடம் இது. ‘‘மனிதன் என்றால் வேலை செய்யக்கூடாது’’ என்ற லட்சியத்தை மேற்கொண்டவர் ஒருவர். தாம் வேலை செய்யுமிடத்தில் இதைக் கடைப்பிடித்து வருகிறார். இவர் வேறு வேலையை ஏற்று தாமாகவே முன் வந்து எவரும் உழைக்காததைப் போல் தான் உழைத்து 100 பேரை அதுபோல் வேலை வாங்கினார். அது அருளின் செயல்.

**6 மேற்பகுதி** - அடாவடிக்காரன் ஒருவனிடம் பிரார்த்தனை பலிப்பதைப்போல் பலரிடமும் (ஒருவர் தவறாமல்) ஒரு ஸ்தாபனத்தில் ஒருவருக்குப் பலித்தது. அடாவடித்தனம் வணங்குகிறது.



**6 கீழ்ப்பகுதி** - உலகில் நல்லது செய்பவனுக்கு விருதுண்டு. தவறு செய்பவனுக்கில்லை. தவறு செய்பவனின் தவறு உலகப் பிரசித்தியான பின், அதுவும் எழுத்தில் வந்து வெளியான பின் (gone on record) அவருக்கு உலகப் பரிசு பிரார்த்தனையால் வருகிறது எனில், அருளின் சக்திக்கு உட்படாததே இல்லை எனப்படும்.

3 முதல் 6 வரை மனம், உணர்வுள்ள பகுதிகள். வாழ்வு இதற்குட்பட்டது, இதுபோன்ற நிகழ்ச்சிகளைக் காணாத அன்பரில்லை. இவற்றிற்கு மீறிய வாழ்க்கைப் பிரச்சினையில்லை. நான் முன்னே கூறிய முன்னேற்றங்கள் இந்த 3-6 நிலைகளுக்குட்பட்டவை என்பதால் அதுபோன்ற முன்னேற்றங்களை பிரார்த்தனையால் பெறலாம், பெற முடியவில்லை எனில் முயற்சி சரியில்லை, போதாது எனப்படும்.

**நல்லதும், கெட்டதும் :**

தம்பி - நல்லதிலிருந்து கெட்டது வரும். கெட்டதிலிருந்து நல்லது வரும் என்று பகவான் ஸ்ரீ அரவிந்தர் கூறுவதற்கு விளக்கம் தரவேண்டும்.

அண்ணன் - இவை தத்துவார்த்தமான கருத்துகள். அன்றாட வாழ்வில் பயன்படக் கூடியவற்றைக் கருதுதல் நல்லது. பொதுவாக, போர் கெட்டது. எல்லா ஆராய்ச்சிகளை ஆரம்பிப்பதும் போருக்காக. போர் முடிந்தவுடன் அவை வெளிவந்து ஒரு புரட்சியை ஏற்படுத்திவிடுகின்றன. 1950க்குப் பின் உலகம் அளவு கடந்து முன்னேறியதற்கு இரண்டாம் உலகப் போரே காரணமாகும். இன்று உலகை ஆட்டி வைக்கும் கம்ப்யூட்டர் போரால் கண்டுபிடிக்கப்-

பட்டதாகும். கெட்டதிலிருந்து நல்லது வந்ததற்கு உதாரணம் இது. 1848இல் காரல்மார்க்ஸ் கம்யூனிசத் தத்துவத்தை உலகுக்கு அறிவித்தார். அதன் முக்கிய கருத்துகள்,

1. நாட்டில் சர்க்கார் (state must wither away) தானே மறைய வேண்டும்.
2. உழைப்புக்குத் தகுந்த ஊதியம் முதலிலும், தேவைக்குத் தகுந்த ஊதியம் முடிவிலும் சர்க்கார் மக்களுக்கு அளிக்க வேண்டும்.

''இன்று உலகை ஆளும் இரு கொள்கைகள் கத்தோலிக்க மதம், கம்யூனிசம்'' என அன்று அன்னை கூறினார். 1917இல் லெனின் கம்யூனிசக் கொள்கையை ஏற்று புரட்சி செய்து ஜார் மன்னனைக் கவிழ்த்தார். 70 ஆண்டுகட்குப் பின் ரஷ்யா கண்டதென்ன?

1. நாட்டில் சர்க்கார் (police govt.) போலீஸ் ராஜ்யம் நடத்துகிறது.
2. தொழிலாளிகட்காக ஏற்பட்ட சர்க்காரும், நாடும் முதலாளித்துவ நாட்டு தொழிலாளிகளுக்குள்ள சம்பளம் கொடுக்க முடியவில்லை.

ரஷ்யா கம்யூனிசத்திலிருந்து மீண்டது. நல்லதிலிருந்து கெட்டது புறப்படுவதற்கு இது உதாரணம்.

உலகப் பிரசித்தி பெற்ற நாவல் ஒன்றில் ஒரு டிராமா வருகிறது. 200 ஆண்டுகட்குமுன் எழுதியதால் அன்று பெண்கள் நடிப்பதில்லை. ஆண்கள் பெண் வேடம் தாங்கி நடிப்பார்கள். பெண்கள் நடித்தால் கணவனுடன் நடிப்பார்கள். அந்த நாடகத்தில் கணவன், கதாநாயகியின் காதலனாக வருகிறான்.



கதையில் அவள் அவனைக் கத்தியால் குத்திக் கொன்று விடுகிறாள். டிராமாவில் குத்துவதாக நடிப்பது வழக்கம். ஒரு நாள் கதாநாயகி உண்மையாகவே அவனைக் குத்திவிடுகிறாள். அவன் (கணவன்) இறந்து விடுகிறான். கேஸ் கோர்ட்டுக்குப் போயிற்று. கால் இடறியதால் தவறி குத்திவிட்டேன் என்றாள் நடிகை. அவள் விடுதலை செய்யப்பட்டாள். அவள் சிறந்த அழகி. மீண்டும் நாடகத்தில் நடித்தாள். அவள் குத்திய அன்று அவளுக்கு சிகிச்சை செய்த டாக்டர் அவளை மணக்க விரும்பி வருகிறான். அவள் முன் மண்டியிட்டு ''என்னை நீ திருமணம் செய்து கொள்வாயா?'' எனக் கேட்கிறான். அவனுக்கு பதில் சொல்லாமல் அவள் கத்திக் குத்து நிகழ்ந்த நாளைப் பற்றிப் பேசுகிறாள். "நான் கைதவறி என் கணவனை குத்தவில்லை. வேண்டுமென்றே குத்திக் கொன்றேன்'' என்று கூறுகிறாள். மணக்க வந்த டாக்டர் பேச்சிழந்தான். திகைத்திருந்தபொழுது மேலும் கூறுகிறாள், ''என் கணவருக்கு என் மீது அளவு கடந்த பிரியம். அது எனக்குப் பிடிக்கவில்லை. எனக்கு கணவன் என்ற கருத்தே ஒவ்வாது'' என்றாள்.

மனைவி மீது அளவுகடந்த பாசம் நல்லது. அதன் விளைவு உயிர் போயிற்று. இது தத்துவ சாரம். நல்லதிலிருந்து கெட்டது எழுகிறது.

**சிறியதும், பெரியதும் :**
**(Finite & Infinite)**

தம்பி - நீங்கள் சொல்வனவெல்லாம் சுருக்கமாக ''நாம் அன்னை அன்பர் என்பதை அறியவில்லை'' எனக் கூறலாம்.

அண்ணன் - பெட்டிக்கடை வியாபாரி, கண்டக்டர், தெரு மூலையில் பஜ்ஜிக்கு பேர் போன அய்யர், ஆபீஸ் பியூன், வீட்டு வேலை செய்பவர் பிள்ளைகள், இன்று படித்து பட்டம் பெற்று, பேராசிரியர், கலெக்டர், துணைவேந்தர், பாங்க் ஏஜெண்ட், M.L.A., MP, மந்திரி, IAS ஆபீசராக வருவதைக் காண்கிறோம். இந்தப் புதுப் பதவி வந்த பிறகு அவர்கள் பழைய நிலை மாறி பெருஞ் செல்வாக்கு வருகிறது. அதை அறியாதவருண்டா? அதற்குத் தகுந்தாற்போல் நடந்து கொள்ளாதவருண்டா? அன்னையை ஏற்பது இத்தனையையும் கடந்த நிலை என்று அறிபவருண்டா? அதற்கேற்றாற்போல் குணத்தை மாற்றிக் கொள்பவருண்டா?

தம்பி - அன்னையை ஏற்பது எனில் என்ன என்ற கேள்வி எழுகிறது?

அண்ணன் - மகாத்மா காந்திஜியை சபர்மதி ஆசிரமத்தில் தரிசித்தவர் பலர். அவருள் ஒரு சிலர் வீட்டுக்கு வந்து மனம் மாறி தம்மையும், தம் வாழ்வையும் காங்கிரஸுக்கே சமர்ப்பணம் செய்தனர். அப்படி எழுந்ததே காங்கிரஸ் தலைமை. அன்னையை அது போல் ஏற்பதே ஏற்பது. அது சிறியது பெரியதாக உதவும் (finite into infinite).

அன்னையை முதலில் தரிசித்தாலும், சமாதி தரிசனம் செய்தாலும், அவர் படத்தைக் கண்டாலும், அவரைப் பற்றிய புத்தகத்தைப் படித்தாலும்,

**நம்முள் பேரமைதி தோன்றி, ஜீவன்**
**முழுவதும் பரவி இனி நாம்**
**அன்னைக்கேயுரியவன்**

என்ற உணர்வு ஏற்படுகிறது. அவ்வுணர்வைப் போற்றி சிதறாமல் மனதால் வளர்ப்பது அன்னையை



ஏற்பதாகும். அப்படி ஏற்றால் finite man சிறிய மனிதன் infinite soul அனந்தமான ஆத்மாவாகிறான். அவனால் அதன்பின் அன்னைக்கு ஒவ்வாதவற்றைச் செய்ய முடியாது.

தம்பி - அது பக்தி, நம்பிக்கை. அவனால் IAS ஆபீசர், பாங்க் ஏஜெண்ட், MLA செய்ய முடியாததைச் செய்ய முடியும்.

அண்ணன் - அன்னை அந்நிலையை அனைவருக்கும் தருகிறார். அதை நீடித்துப் பெற்றவர் குறைவு. அந்த பக்தர் நாட்டில் எலக்ஷன் போக்கை மாற்றுவார். வானிலை அறிக்கைக்கு மாறாக மழை பொழிவதையோ, புயலைத் தடுப்பதையோ அவரால் செய்ய முடியும். நாட்டுச் சட்டங்கள் அவர் மனநிலைக்கேற்ப மாறும். சின்ன புத்தி எழுந்தால் அந்த சக்தி விலகி மீண்டும் அவர் சிறிய மனிதனாகி விடுவார்.

தம்பி - சின்ன புத்தியுள்ளவரை ஆதரித்தாலும் அன்னை சக்தி போகும்.

அண்ணன் - அவர் குடும்பம் தொடர்ந்து உயரும். நாட்டில் முதன்மை பெறும். இது தவறாது எல்லா அன்பர்கட்கும் அன்னை அளிப்பது. பெறுபவர், நீடித்துப் போற்றுபவர் குறைவு.

தம்பி - இல்லை என்றே சொல்லலாம் போலிருக்கிறதே.

அண்ணன் - மந்திரி, MP, IAS ஆபீசர், பெருந்தொழில் அதிபர் எதையும் சாதிக்கலாம். அவர்களை மீறியது உண்டு. ஆயிரம் உண்டு. அன்பர்கள் அவர்கள் கைவிட்டதைச் சாதிப்பார்கள். அவர்கள் செய்வதையும் தேவைப்படும் பொழுது, அவர்களால் முடியும் என்ற உண்மை இன்று பலரும் அறியாதது.

தம்பி - அருளாலும், அதைப் பெறும் நல்லெண்ணத்தாலும் இந்த மாற்றம் எழுகிறதா?

அண்ணன் - நல்லெண்ணம் முக்கியம். அன்பன் எண்ணத்தையே கடந்து வரவேண்டும். என்றாலும் உபரி நல்லெண்ணமில்லாமல் உண்மை அன்பனாக ஆக முடியாது.

தம்பி - இவற்றையெல்லாம் கதையாக எழுதினால்தான் புரியும். கட்டுரை விளங்காது.

அண்ணன் - இது போன்ற கதை எழுதும் திறனுள்ள அன்பரில்லையே.

தம்பி - சேவை, அரசியல், பொது வாழ்வில் உள்ள அன்பர்கட்குச் சொல்லக் கூடியது ஏதேனும் உண்டா?

அண்ணன் - அது போன்ற அன்பர்கள் அனுபவம் நமக்குத் தெரிந்தவற்றை யோசனை செய்து பார்த்தால், நாம் சொல்லக்கூடிய சட்டங்கள் விளங்கும்.

தம்பி - அந்த அனுபவங்களை மனதில் கொண்டுதான் கேட்கிறேன்.

அண்ணன் - சுருக்கமாகச் சில சட்டங்களை - பொதுவான அன்னை சட்டங்களைச் - சொல்லலாம்.

1. தகுதியும், திறமையுமிருந்தால் மற்றவர்கள் போட்டியிட்டுப் பெறுவது அன்பர்கட்கு போட்டியில்லாமல் கிடைக்கும். தேடியும் வரும்.
2. அப்படி வரும்பொழுது அன்பர் எதிர்பார்ப்பதைவிட ஓரிரு நிலைகள் உயர்வாக வரும்.
3. அன்பராகவே தடம் மாறாவிட்டால், தொடர்ந்த உயர்வு தேடி வரும்.

தம்பி - நம் அனுபவங்கள் இதைத்தான் கூறுகின்றன.



- காவல்காரன் முனிசிபல் கௌன்சிலுக்கு நின்றான்.
- ஒரு முறையும் முனிசிபல் கௌன்சிலில் நிற்க முடியாதவருக்குக் கௌன்சிலர் பதவி கிடைத்தது.
- எளிய தொண்டர் மத்திய மந்திரியானார். பிறகு மாநில முதலமைச்சரானார்.
- MP சீட் கேட்டவருக்கு மந்திரிப் பதவி கிடைத்தது.
- காரசாரமாகப் பேசிய MPயை மந்திரியாக்கினார் பிரதமர். பிறகு நெடுநாள் கவர்னராக இருந்தார்.
- புதியதாக ஜில்லா ஸ்தாபனம் அமைத்தபொழுது தற்செயலாகச் சமாதி தரிசனம் செய்து போனவர் ஜூனியரானபோதும் தலைமைப் பதவியை அளித்தனர்.
- கமிட்டியில் உறுப்பினராகவுமில்லாதவரை செக்ரடரியாக்கினார். அதேபோல் மற்றொருவரை தலைவராக்கினார். அவர் 20 வருஷமாகத் தலைவர் பதவியிலேயேயிருக்கிறார்.
- ஒரு துறையில் பரிசு இல்லை என்றால், அதைப் புதியதாக உற்பத்தி செய்து கொடுப்பார்கள்.
- விருது பெற்றவர் எனக்கு இந்த விருதை எப்படிக் கொடுத்தனர் என வியக்கும்படியும் வரும்.
- சர்வதேச ஸ்தாபனக் கூட்டத்தில் உதவி செய்யப் போன அன்பருக்கு உறுப்பினர் பதவியும் கேளாமல் வந்த நிகழ்ச்சியுண்டு.
- கடும் போட்டியுள்ள பதவிக்குப் போட்டியிடுபவர்

அனைவரும் சேர்ந்து அன்பரைப் போட்டி இல்லாமலும் தேர்ந்தெடுத்தனர்.

- நாட்டு ஜனாதிபதி தேர்தலுக்கு முதன்மையான கட்சி வேட்பாளரைத் தேர்ந்தெடுத்தபொழுது மூன்றாம் நிலையிலுள்ளவர் அன்பர் ஆதரவு பெற்றவர். பெரும் மெஜாரிட்டியுடன் முதன்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

- புதிய தொண்டர் நேரடியாகத் தலைவராவது அன்பர் அனுபவம்.

இதுபோல் அன்பர்கள் பெறுவதில் அன்னை அருளை சற்று விளக்க முடியுமா?

- தொடரும்.

❋ ❋ ❋

## ஸ்ரீ அரவிந்த சுடர்

விஸ்வாசத்தை இரு வகைகளாகச் சொல்லி இரண்டையும் போற்றுகிறோம். ஒன்று ஒருவருக்கு மட்டும், மற்றது அனைவருக்கும் உரியது. எல்லாக் குழந்தைகளிடமும் அன்பு செலுத்துவது ஒரு வகை. மனைவி மீது மட்டும் பிரியமாக இருப்பது அடுத்த வகை.

*பொதுவான அன்பு பெரியது. குறிப்பான அன்பு சிறப்பானது.*





## P. 14. The Energy that creates the world can be nothing else than a Will

### சக்தி என்றிருந்தால் அதன் மூலம் Will மனஉறுதி

நாம் ஓர் இடத்திற்கு - பள்ளிக்கூடம், ஆசிரமம், தர்ம ஸ்தாபனம் - போய் அங்கு நிர்வாகம் சிறப்பாக இருக்கிறது. உள்ளவர்கள் லட்சியமாய்ப் பழகுகிறார்கள். உயர்ந்த இடம் எனக் கண்டால் இதன் தலைவர் யார் எனக் கேட்கிறோம். தலைவர் என நாம் கேள்விப்படுபவர் இவ்வளவு உயர்ந்த ஸ்தாபனத்தை நடத்த முடியாது என மனதில் பட்டால், அவரே செய்கிறாரா அல்லது வேறு யாராவது பின்னணியிலிருக்கிறாரா என விசாரிப்போம். தலைவர் யார் எனத் தெரிந்தபின், ஏன் இந்த ஸ்தாபனத்தை நடத்துகிறார் எனக் கேட்கிறோம். ஒரு பெரிய காரியம் கண்ணில்பட்டால், அதன் பின் ஒரு மூலகர்த்தா இருக்கிறார், இருக்க வேண்டும் என்பது நம் அபிப்பிராயம். சக்தியின் பின்னால் மனஉறுதி என்பது அது போன்றது.

**உறுதி (will) இல்லாமல் சக்தியில்லை.**
**சக்தியை எழுப்பாத உறுதியில்லை.**

ஒரு சாதாரண குடும்பப் பையனுக்குப் பெரிய உத்தியோகம் கிடைத்தது எனில் நம் மனம் கேள்வி கேட்கிறது. பையன் rank வாங்கியவன் என்றால், மனம் ஓரளவு சமாதானம் அடைகிறது. மீண்டும் ராங்க் மட்டும் இவ்வளவு பெரிய வேலையை வாங்கித் தாராதே என்ற கேள்வி எழுகிறது. பணமா, சிபார்சா என இதர கேள்விகள் எழும். பணம் என்றால் மனம் அடங்கும். சிபார்சு என்றால் மனம் ஏற்றுக் கொள்ளும். அவையில்லை, பையன் rank உம் வாங்கியவனில்லை என்றால் கேள்வி மேல் கேள்வி எழும். நாம் ஏற்கும் பதில் எதுவும் கிடைக்கவில்லை என்றால் மனம் புதுக்

கேள்விகளை எழுப்பும். ஒரு சிலர் personality பர்சனாலிட்டிக்குக் கிடைத்தது என்பார்கள், அடுத்தவர் aptitude testஇல் திறமை talent இருந்திருக்கும் என்பார்கள். ஒருவாறாக பதில் கிடைத்துவிட்டால்,

**வேலை பெரியது என்றால், அதன் பின் விஷயம் இருக்குமே என்று நினைத்தேன்**

என்று விஷயம் தெரிந்தவர்கள் கூறுவதுபோல், சக்தி என்று இருந்தால் அதன் பின் will மன உறுதியிருக்கும் என பகவான் ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார். இதுபோன்ற கருத்துகள் வேறு சிலவற்றையும் நாம் கூறலாம். அவை ஸ்ரீ அரவிந்தர் கூறியவை,

* **ஒருவருடைய உயிர் பிரிய வேண்டும் என்றால் பரமாத்மாவும், ஜீவாத்மாவும் அதற்குச் சம்மதிக்க வேண்டும்.**
* **எந்தச் சிறு காரியம் நடக்க வேண்டுமானாலும் இந்த இரண்டு - பரமாத்மா, ஜீவாத்மா - உத்தரவும் தேவை.**
* **ஒருவர் படுக்கையாக இருந்து உயிர் பிரிகிறது எனில், அவருக்கு முக்கியமானவர் ஒருவர் "இவர் போனால் நல்லது" என்று நினைக்காமல், பேசாமல் அவர் உயிர் பிரியாது.**
* **நமக்கு எந்தக் கஷ்டம் வந்தாலும், நாமே - உள்மனம் - அழைக்காமல் அது வாராது. மேல் மனம் கஷ்டமாக உணருவதை, உள்மனம் சந்தோஷமாக அனுபவிக்கிறது. சில சமயங்களில் அழைக்கிறது என்று பகவான் கூறுகிறார்.**
* **கஷ்டம் என வந்தால் அதன்பின் நம் அழைப்பு இருக்கும். நல்லதற்கும் அதுவே சட்டம்.**

❋ ❋ ❋

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 177, Pappammal Koil Street, Pondicherry-12 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.

Editor: Karmayogi

## காணிக்கை, பிரசாதம்

- ✡ காணிக்கைக்கு அளவில்லை, அவசியம் உண்டு.

  எவ்வளவு பெரிய காரியத்தையும், எவ்வளவு சிறிய காணிக்கையும் சாதிக்கும். ஷாக் அடிக்க எவ்வளவு சிறிய தொடர்பும் போதும். அன்னை சக்தியுடன் தொடர்பு கொள்ள எந்தச் சிறிய காணிக்கையும் போதும்.

- ✡ காணிக்கையின் அளவு பெரியதானால், அது சேவையாக மாறும்.
- ✡ அன்னை ஏற்கும், போற்றும் காணிக்கையாக வேண்டுமானால் அனைத்தையும் காணிக்கையாக்க வேண்டும் - வேலை, செல்வம், ஆன்மா, உயிர் - மற்றவர்களை அர்த்தமற்ற பூஜ்யம் என்கிறார் அன்னை.
- ✡ ஆரம்பித்த காணிக்கையை நிலைமை மாறும்பொழுது குறைக்காமலிருப்பது கடினம். அப்படியிருப்பது முடியாததை முடித்துக் கொடுக்கும்.
- ✡ பலன் வேண்டியவருக்கே காணிக்கை தேவை. பலன் தேவையில்லை எனில் காணிக்கை தேவையில்லை.
- ✡ காணிக்கையை நாமே செலுத்த வேண்டும். பிறர் மூலம் போனால் பலனில் பகுதியோ, முழுவதுமோ எடுத்துப் போகின்றவர்க்குப் போகும்.
- ✡ மனதால் காணிக்கையை அனுதினம் செலுத்தியபின், அளிக்கும் காணிக்கை புனிதமானது.
- ✡ பிரசாதமாக அன்னை தருவது சமாதி புஷ்பம்.
- ✡ ஒரேயொரு இதழ் சமாதி புஷ்பமும் பவித்திரமாக கிடைப்பது அரிது, அரிதினும் அரிது.
- ✡ காணிக்கையை மனதால் செலுத்தி, பிரசாதத்தை மானசீகமாகப் பெற்றால் சமாதி புஷ்பம் சமாதியிலிருந்து நமக்கே நேரடியாக எவருடைய ஸ்பரிசமும் படாமல் கிடைக்கும்.

Continued in the back cover...

- ✡ நாம் பெறும் பிரசாதம், நாம் அனுப்பும் காணிக்கை போலிருக்கும்.
- ✡ பிரசாதம் எவருடைய கையால் கிடைக்கிறதோ, அவருடைய அம்சம் பிரசாதத்திற்கு உண்டு.
- ✡ போஸ்ட்மேன் கொண்டு வரும் பிரசாதம் போஸ்ட்மேனால் பாதிக்கப்படாது.
- ✡ பிரசாதம் கொண்டு வருபவர் நம்முடன் தொடர்பு இல்லாதவரானால், பாதிப்பு அல்லது சிறப்பது மிகக் குறைவு. நம்மையறிந்தவர் கொண்டு வரும் பிரசாதம் அவருக்கு நம்மீதுள்ள அபிப்பிராயத்தைப் பூர்த்தி செய்யும்.
- ✡ எவர் மூலமாகப் பிரசாதம் வந்தாலும், அவருக்கேயுள்ள ஆழ்ந்த இராசியொன்று இருக்குமானால், அது நம்மில் வெளிப்படும்.
- ✡ காணிக்கையை எடுத்துப் போகின்றவர்க்கு, காணிக்கைக் கொடுப்பவரின் இராசி வரும். அதற்கும் மேற்கூறியதே சட்டம்.
- ✡ அதிர்ஷ்டமிருந்தால் நல்லவர் காணிக்கையை எடுத்துப் போகும் சந்தர்ப்பம் வரும். நல்லவர்க்குப் பிரசாதம் கொண்டு போக முடியும்.
- ✡ அதிர்ஷ்டமிருந்தால், தீயவர் காணிக்கை நம்மிடம் வாராது. அவருக்குப் பிரசாதம் கொண்டு போகும் நிலை எழாது.
- ✡ காணிக்கையைவிட முக்கியமானது இல்லை. அதைச் சரியாகச் சமர்ப்பிப்பது ஒரு யோகம். பிரசாதத்தைவிட உயர்ந்ததில்லை. அதை நேரடியாகப் பெறுவது அருள்.
- ✡ காணிக்கையின் பவித்திரத்தையும், பிரசாதத்தின் தூய்மையையும் பலன் நிர்ணயிக்கும், எடுத்துக் காட்டும்.

❋ ❋ ❋